விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 மாசி 11 றவி ஆகிர் 28 இதழ் 11

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 23-2-82

## இராணுவத்தினர் தாக்கினராம்

### இருஇளைஞர்கள் நிலைகுறித்து கோப்பாய் எம். பி. புகார்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரால் இரு இளைஞர்கள் தாக்கப்பட்டது குறுத்து கோப்பாய் எம். பி. திரு.எம்.ஆலாலசுந்தரம், வட பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரிடமும் குருநகர் இராணுவ முகாம் பொறுப்பதிகாரியிடமும் முறையிட்டுள்ளார். உரும்பராய் வடக்கு த. ஜெயந்திராசா, கோண்டாவில் பாலகருணைகரன் ஆகிய இரு இளைஞர்களுமே இராணுவத்

(8ம் பக்கம் பார்க்க)

## நெல்நிறுவை குறைபாடுகள் வனிக்கப்படும்

[யாழ்ப்பாணம்]

விவசாயிகளிடம் நெற் கொள்வனவு செய்யும் நெற் சந்தைப்படுத்தும் சபையினதும் கூட்டுறவுச்சங்கங்களினதும் நிறுவை அளவைகளில் குறைபாடுகள் இல்லாதிருக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க அதிபருக்கு சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் தலைமைப்பீடத்திலிருந்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

(8-ம் பக்கம்பார்க்க)

★ காங்கேசன்துறை - நாகபட்டினம்

# கப்பல் சேவை நடத்த யாழ். மாவட்ட அபி. சபை முடிவு

## அரச அதிபர் தலைமையில் ஆலோசனை மாநாடு

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்ட அபிவிருத்திசபை காங்கேசன்துறையிலிருந்து நாகபட்டினம் வரை கப்பல்சேவை ஒன்றை நடாத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.**

யாழ். செயலகத்தில் யாழ் மாவட்டச் செயலாளரும், யாழ் அரசாங்க அதிபருமான திரு, தேவநேசன் நேசையா தலைமையில் இக் கப்பல்சேவை நடத்துவது குறித்து மகாநாடு ஒன்று நடைபெற்று விரிவாக ஆராயப்பட்டது.

இம் மகாநாட்டில் கோப்பாய் எம். பி. திரு மு. ஆலாலசுந்தரம், யாழ். திட்டமிடல் பணிப்பாளர் திரு.எஸ். சிவதாசன் மற்றும் பருத்தித்துறையில் அமைந்துள்ள கப்பல் கட்டும் நிறுவன அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். இக் கப்பல்சேவையை யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையா அல்லது அபிவிருத்தி சபையின் அனுசரணையுடன் வேறு நிறுவனமா நடாத்துவது என்பது குறித்து அபிவிருத்திசபை விரைவில் முடிவு செய்யும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் ''ஈழநாடு'' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

நிலைமை இவ்வாறிருக்க தலைமன்னருக்கும் இராமேஸ்வரத்துக்கு மிடையே கப்பல்சேவையொன்றை நடத்துவதென்று யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் முன்னர் தீர்மானித்திருந்தும் இக் கப்பல்சேவையை மன்னார் அபிவிருத்திசபையே நடத்த விருப்பதாகவும், இதற்கு யாழ். பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம் விட்டுக்கொடுத்ததாகவும் வெளிவந்த செய்தி குறித்து யாழ். ப. நோ. கூ. ச. தலைவர் திரு. எம். ஆலாலசுந்தரத்திடம்கேட்டபொழுது அவர் தெரிவித்ததாவது:

### 'ஆலால்' விளக்கம்

''கூட்டுறவுச் சங்கத்தின் அடிப்படைக் கொள்கை, ஒரு சங்கத்தின் தொழிற்பரப்புக்கு அப்பால் ஒரு முயற்சி மேற்கொள்ளப்படும்பொழுது, அப்பகுதி மக்களின் ஆதரவைப் பெறவேண்டியது அத்தியாவசிய கடமை. மன்னார்மாவட்ட அபிவிருத்திசபை அக் கப்பல்

(8ம் பக்கம் பார்க்க)

## நூலக வாரம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுசன நூலக வாரம் நேற்று ஆரம்பமான போதிலும், உத்தியோகபூர்வமாகஇன்று காலை மன்றக்கீதம் இசைக்க எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் மன்றக்கொடியை ஏற்றி வைத்து நூலகவாரத்தை ஆரம்பித்து வைப்பார்.

யாழ்பொதுசன நூல் நிலையப் புனரமைப்புக்கு நிதிசேகரிக்கும் பொருட்டு நூலகவாரமும், நூலக கொடித்தினமும் இம் மாதம் 28ம் திகதிவரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்றுகாலை 9மணிக்கு யாழ் மாநகர முதல்வர் திரு.இராசா விசுவநாதன் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில்திரு. அ. அமிர்தலிங்கம், யாழ். மாவட்ட எம். பி.க்கள் அபிவிருத்தி சபைத் தலைவர் மற்றும்உறுப்பினர்கள் மாநகர சபை உறுப்பினர்கள் உரை நிகழ்த்துவர். (மா)

## யாழ். பொதுசன நூலகக் கட்டிடம்: 6 லட்சத்து 78,000 ரூபா இதுவரை கிடைத்துள்ளது

### மேயர் தகவல்

(ஏ. வி. மாணிக்கம்)

**யாழ். பொதுசன நூலகக் கட்டிடத்தை அமைப்பதற்கென இதுவரை ஆறு லட்சத்து 78ஆயிரம் ரூபா கிடைத்துள்ளதாக யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.**

யாழ். மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற இம் மகாநாட்டில் நூலகக் கமிட்டி உறுப்பினர்களான ஜனாப் ஷாகுல் ஹமீட், திரு.க.முருகரத்தினம், திருமதி அ. நவரத்தினம், வண. க. அ. பிரான்சிஸ் யோசப் அடிகள், மற்றும் நூலகப்பொறுப்பாளர் திருமதி ஆர். நடராசா, மாநகரஆணையாளர்திரு.கே.சிவஞானம்உட்பட நூல் நிலையக் கொடித்தினத்துக்கென தேர்ந்தெடுக்கப்பட்ட வடமாநிலச் சுற்று

(8ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கி, தோட்டாக்கள் கொள்ளை

[கிளிநொச்சி]

உருத்திரபுரம் கல்வி நிலையம் ஒன்றில் துப்பாக்கி முனையில் துப்பாக்கி, தோட்டாக்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

துப்பாக்கியுடன் இக்கல்வி நிலையத்துக்குள் புகுந்த மூன்று இளைஞர்கள், நிலையப்பொறுப்பாளர் ஜோன் மதுரநாயகம் என்பவரைப் பயமுறுத்தி துப்

(8-ம் பக்கம்பார்க்க)

## முஸ்லிம்களுக்கு தனியான தொழில்நுட்பக் கல்லூரி

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கென சகல நவீனவசதிகளையும் கொண்ட தொழில்நுட்பக்கல்லூரி ஒன்று கொழும்பில் அமைக்கப்படும் என்று ஜனாப் நளீம்ஹாஜியார் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்க முதலாண்டுவிழாவில் உரையாற்றுகையில் தான் அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

முஸ்லிம்களுக்கென ஒரு தொழில் நுட்பக்கல்லூரி இல்லாதது பெருங்குறை என்றும், பெருஞ்செலவில் நவீன வசதிகளுடன் புதிய தொழில் நுட்பக் கல்லூரி அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## ரூ. 75,000 இந்தியச் சேலைகள் கடத்தல் முறியடிக்கப்பட்டது!

### கார் பறிமுதல்; அபராதம் ரூ. 10,000

(யாழ்ப்பாணம்)

75 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்தியச் சேலை வகைகளைக் காரில் கடத்தி வந்த ஒருவர் யாழ். இரகசியப்பொலிசாரினால் கைது செய்யப்பட்டு, யாழ். சுங்க இலாகாவில் ஒப்படைக்கப்பட்டார்.

விசாரணைகளை மேற்கொண்ட யாழ் மாவட்ட உதவி சுங்க சேகரிப்பாளர் திரு. எஸ். எம். ஜே. சேனரத்ன சேலைகளையும் காரையும் பறிமுதல்செய்ததுடன், 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தார்.

இச் சேலைவகைகள் மயிலிட்டியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மானிப்பாய் ஊடாக கடத்திவரப்பட்டபோது யாழ். இரகசியப் பொலிசாருக்குக் கிடைத்த தகவலின் பேரில், மானிப்பாயில் வைத்து முறியடிக்கப்பட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (மா)

## 3 சோவியத் பிரஜைகள் நாடுகடத்தப்பட்டனர்

சிங்கப்பூர்,பெப்,22

உளவு பார்த்த குற்றத்துக்காக ஒரு ராஜதந்திரி உட்பட மூன்று சோவியத் பிரஜைகளை சிங்கப்பூர் அரசாங்கம் நாடு

(8ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

நல்ல நண்பர்கள் இல்லையே என்ற குறையை
நல்ல நூல்கள் நீக்க வல்லவை;
எவ்வளவு அதிகமாக நான் வாசித்தேனோ
அவ்வளவு அதிகமாக அவற்றின்அழகைஉணர்ந்தேன்

— மகாத்மாகாந்தி

# நமது நோக்கு

## ஒரு புதிய பாதையின் அவசியம்

போலந்தில் இராணுவ ஆட்சி முடிவடைந்தாலும் மக்கள் வாழ்க்கை நிலை சுமுகமடையவோ அல்லது அவர்கள் தம் உரிமைகளுடன் பாதுகாப்பாக வாழவோ வழி பிறப்பது விரைவில் சாத்தியமற்றது எனச் சொல்லப்படுகிறது.

இதற்குரிய காரணங்களை ஆராய்ந்து எங்கு பிழை, எங்கு சரி இருப்பதெனநாம் கணிக்க முற்படவில்லை. ராணுவ ஆட்சியில்லாமலே பொதுமக்கள் துன்பத்துக்குள்ளாகலாம் என்பது எமது கருத்து.

அவசரகாலநிலைமைநமது நாட்டைவிட்டு நீங்கியதை நாம் குதூகலிக்க எவ்விதத்திலும் நியாயமில்லை.

வடபகுதியென்றும், யாழ். மாவட்டம் என்றும் சொல்லப்படும் பிரதேசத்தில் பயங்கரவாதத்தைத் துடைத்தெறிய பொலிஸாரும், பாதுகாப்புப் படையினரும் கடந்த மூன்றுவருடங்களாகத் தம்மாலியன்றளவு பாடுபட்டு வருகின்றனர்.

'அவசரகாலம் 1979' என்று மேளதாளத்துடன் தொழிற்பட்டகாலம் தொட்டு இன்றுவரையும், பயங்கரவாதம் இப்பகுதியில் எவ்விதத்திலும் ஓய்ந்த பாடில்லை. ராணுவத்தினர் இங்கு வந்திறங்கித் தத்தம் அலுவல்களில் கண்ணுங்கருத்துமாயிருந்தால் பயங்கரவாதம் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும் என்றெண்ணி — கால எல்லையும் குறிப்பிடப்பட்டிருந்தது. 'அவசரகாலம்' தொடங்கின அந்த 'சுப முகூர்த்தத்தி'லேயே 'பயங்கரவாதிகள்' என்று சொல்லப்பட்ட இருவர் மர்மமாய் மாண்டனர். வருடமுடிவிலே 1980 நிலைமை சாதாரணம் என்றுமுடிவு கட்டப்பட்டு இராணுவத்தினர் வெற்றிவாகையுடன் திரும்பிய ஞாபகம் உண்டு.

இன்று 1982, இரண்டாம் மாதம் முடிவடையும் கட்டம். அரசியற்கொலை;பயங்கரவாதத்தில் அரும்பிய ஆரம்பம் கடந்த ஆட்சியிலே இன்று சுமார்ஏழுவருடங்களுக்கு முன்னென்று கணக்கிடலாம்.

இந்தக் கால எல்லையில் எத்தனை பயங்கரகொள்ளைகள், அரசியல் வன்செயல்கள், கொலைகள், எத்தனை பொலிஸ், இராணுவ மாநாடுகள், நிபுணர் புலனாய்வுகள் முதலியன மிக வேகமாக நடந்தேறின.

இவற்றைக் கணக்கெடுத்து, சீர்தூக்கிப் பார்க்குங்கால், வரவுசெலவுத் திட்டமொன்று தயாரிக்க முடியுமாயின், பொலிஸ்— ராணுவ பாதுகாப்பு, பயங்கரவாத ஒழிப்பு எந்த நிலையில் இருக்கென்று விருப்பு வெறுப்பின்றிக் கணிக்கலாம்.

நாம் முன்னொருமுறை குறிப்பிட்டதுபோல், பயங்கரவாதம், இப்பகுதிக்கோ, இந்த நாட்டுக்கோ, ஒரு தனித்துவ தீங்கெனக் கொள்ளலாகாது.

அசாதாரண சூழ்நிலையில் ஆரம்பமாகும் இந்தத் தீய இயக்கம் அசாதாரண நடவடிக்கைகைகள் மூலமே முடிவு கட்டப் படவேண்டியது.

வடபகுதியில், சிறப்பாக யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் பாதுகாப்பு படைகள் ''உஷார், உஷார்'' என்பதைவிட, வேறெந்த வெற்றியையும் ஈட்டியதாகச் சொல்லவில்லை. பயங்கரவாதம் பொதுமக்களைத் தாக்குவதில்லை; அதுபொதுமக்களுடனோ அரசியல்கட்சிகளுடனோ தொடர்பு வைத்திருந்தால் இந்தக்கால எல்லைக்குள் அழிந்திருக்கும்.

பாதுகாப்பு படைகள் இப்பகுதியில் நடமாடுவதால் பயங்கரவாதம் குன்றவில்லை. இன்னும் கூடியிருப்பதாகப் பொதுமக்கள்கருதுகின்றனர்.

இராணுவ — பயங்கரவாதப் போர் பொதுமக்கள் வாழ்வை அநியாயமாகச் சீர்குலைகின்றது.

''புங்குடுதீவில், சங்கானையில், அச்சுவேலியில், அலுப்பாந்தியில் குழப்பமாம்'' என்று அடிக்கடி வதந்திகள் கிளம்ப, அன்றாடு உழைத்துப்பிழைக்கும்ஏழை மக்கள் 'கெடிக்' கலங்கி. கடையைச்சாத்தி பஸ் வண்டிகளைப் பிடிக்க ஓட்டம் எடுக்கும் காட்சி யாழ்ப்பாணம் பெரியகடையின்சாதாரண காட்சியாகின்றது.

ஒரு புதிய பாதையைக் கண்டுபிடித்து பயங்கரவாதத்துக்குமுடிவுகாண ஆட்சியாளர் சிந்திக்குங்காலம் வந்துவிட்டது.

எவ்வித நியாயமுமின்றி வருடக்கணக்காய் அவஸ்தைப்படும் இப்பகுதி மக்களுக்கு அமைதி அளிப்பது அரசின் கடமை.

## பூரண சுகமடைந்த பிரதமர்

இரண்டு மாத காலம் நாட்டில் இல்லாத பிரதமர் மீண்டும் சுகமடைந்து திரும்பிய செய்தி எங்கும் கலகலப்பாகவே இருக்கிறது.

பொதுமக்கள் சேவையில் கடினமாக உழைத்துஉயர்ந்தவர் திரு. பிரேமதாசா; அதே சமயம்அச்சேவையின் கடின உழைப்பால் இணைத்தவரும் அவரே!

இது நாடறிந்த ரகசியமென்பதால் அவர்வருகையையிட்டு மக்கள்கு தூகலிப்பதும் மக்களின் இன்முகங்களைக் கண்டு பிரதமர் புத்துயிர்பெறுவதும்வெறும்சம்பிரதாயச் சடங்குகள் அல்ல

அவருடைய அவசிய சிகிச்சைக்குத் தக்க நேரத்தில் தக்க இடத்துக்கு அவர் விரைந்தது நாட்டின் நல்லதிர்ஷ்டம்.

அரசியல் வாதிகள், அரசியல் எதிரிகள் இந்த அடிப்படை உண்மையிலுங் கூட ''வாய்வைக்கத்'' தயங்குவதில்லை.

அவருடைய சிகிச்சைக்குரிய செலவைப் பொறுப்பது யார் என்ற பிரச்னை எவ்வளவு அவசியமாகவிருந்தாலும் அது அவ்வளவு விரைவில் பிரஸ்தாபிக்கப்படுவது பண்பின்மையையே காட்டுகின்றது.

வலதோ, இடதோ, நாட்டுக்கு இனமத, பேதமின்றி மீண்டும் சேவைபுரிய சுகமடைந்துவருந்தலைவர் மக்கள் அபிமானத்துக்குரியவர்.

இந்த வகையில் பிரதமர் பிரேமதாசாவின் தொண்டு தொடரவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

### பாரதியாரின் பக்திப்பாடல்கள்

# யாப்பமைதிஉள்ள விநாயகர் நான்மணிமாலை

பாரதியார் புதுமைக்கவி தேசியக்கவி, மக்களிடைய எழுச்சியை ஊட்டினர். பல பழமையான மூடப்பழக்க வழக்கங்களைச் சாடினர். இக் கூற்றுக்கள் முழுவதும்உண்மை ஆனல் அவர் பழைய நல்ல பண்பாடுகளைப் பேணிப் பாதுகாத்தார் அவற்றைத் தமது பாடல்களில் போற்றினர். இவற்றிற்கு அவருடையதோத்திரப்பாடல்களும், பக்திப் பாடல்களும் தக்க சான்ருகும்.

பாரதியாரின் கவிதைகள் புதுமைமிக்கன. அதேசமயம் யாப்பமைதி பொருந்த இலக்கிய முறையிலும் அவர் பாடல்களை அமைத்துள்ளார். இதற்கோர் எடுத்துக்காட்டு அவர் பாடிய விநாயகர் நாண்மணி மாலையாகும். வெண்பா, அகவல், கட்டளைக் கலித்துறை, விருத்தம், என்னும் நான்கு வகைச் செய்கட்களால் அந்தாதி தொடையாகத் தொடுக்கப்பெற்ற நாற்பது பாடல்களாகும். சிறந்த யாப்பிலக்கண அறிவு இல்லாமல் இந்த மாலையைப் பாடுதல் முடியாத செயலாகும். பதினெராந் திருமுறையில் காணப்படும் கோயில் நாண்மணி மாலை என்னும் பிரபந்தத்தை யாப்பமைதியில் இதற்கு ஒப்பிடலாம்.

விநாயகர் அருள் பெற்றவர் நம்பியாண்டார்நம்பி. அவர் விநாயர் மேற்பாடிய பல பிரபந்தங்கள் பதினெராம் திருமுறையில் உண்டு. ஒரு பாட்டில் விநாயகன் அருள் பெற்ருல் ஒரு அச்சமும் இல்லை எம்மை வருத்தவரும் வினை நெருப்பை அருந்த வரும் எறும் புக்குச் சமானம் என்று கூறுகிருர். இதே உறுதிப் பாட்டை பாரதியாரின் பாடலிலும் காணலாம், இறை குமாரன் விநாயகன் எம்துணை இருக்க மனதிலே அச்சமில்லை அவர் தொண்டருக்குத் துணை எனப்பாடுகிருர்.

''முறையே நடப்பாய்
முழுமூட நெஞ்சே
இறையேனிம் வாடா
யினிமேல் — கறையுண்ட
கண்டன் மகன்வேதா
நாரணன் சக்திமகன்
தொண்டருக் குண்டு துணை''

பாலும் தெளிதேனும் கொடுத்து விநாயகரிடம் முத்தமிழை யாசித்தார் ஔவையார் முத்தமிழிலும் மிக விருப்பமுள்ள பாரதியார், செந்தமிழ் நாட்டைச் சிறப்பித்துப் பாடியவர் ஈாடு அப்போதிருந்த சூழ்நிலைக்குத்தககதாக அவரது வேண்டுதல் மாறுபடுகிறது, நாட்டுக்குத் தொண்டு செய்ய நீண்ட வாழ்நாள் வேண்டும். அச்சமில்லா உள்ளம் வேண்டும். செல்வம் கூட வேண்டாம் இறைவனின் உறுதுணைவேண்டும், சிந்திந்துச் செயலாற்ற உள்ளத்தில் உறுதி வேண்டும். எங்களுக்கு எது வேண்டுமென்பது விநாடகருக்குத் தெரியும்வேண்டியவற்றை இவனுக்கு இது வேண்டும் என நீ நினைப்பதை எனக்குத் தந்தால் போதும் எனபது பாரதியாரின் கொள்கை,

''நோவு வேண்டேன்
நூருண்டு வேண்டினேன்
அச்சம் வேண்டேன்
அமைதி வேண்டினேன்
உடைமை வேண்டேன்
உன்துணை வேண்டினேன்
வேண்டா தனைத்தையு நீக்கி
வேண்டிய தனைத்தும்
அருள்வதுன் கடனே''

விநாயகப் பெருமானது பாதங்களை பூக்கொண்டு சென்று வணங்கித் தஞ்சமென அடைபவர்க்கு 'வாக்குண்டாம் நல்லமனமுண்டாம் மாமலராள் நோக்குண்டாம் மேனி நுடங்காது' என ஔவையார் கூறிப்போயினர். இதே உண்மையை பாரதியார் ஒரு விருத்தத்தில் கூறியிருக்கிருர்.

'செய்யா ளினியாள்
ஸ்ரீதேவி
செந்தா மரையிற்
சேர்ந்திருப்பாள்
கையா ளௌநின்
றடியேன் செய்
தொழில்சள் யாவும்
கைகலந்து
செய்வாள் புகழ்சேர்
வாணியுமென்
னுள்ளே நின்று
தீங்கவிதை
பெய்வாய் சக்தி
துணைபுரிவாள்
பிள்ளாய் நின்னைப்
பேசிடிலே'

தம் உள்ளத்தைப் பார்த்துப் பாரதியார் ஓர் அறிவுரை கூறுகிருர். மூன்று செயல்களைச் செய்தால் கணநாதன் நம் குடியை வாழ்விப்பான் என்று கூறுகிருர். அந்த அறிவுரை மனிதர் யாவர்க்கும் பிரதானமாகத் தமிழ் மக்களுக்கு ஏற்றதாகும்.

'நமக்குத் தொழில் கவிதை
நாட்டிற் குழைத்தல்
இமைப்பொதுமுஞ் சோரா
திருத்தல் உமைக்கினிய
மைந்தன் கணநாதன்
நங்குடியை வாழ்விப்பான்
சிந்தையே இம்மூன்றும்
செய்.'

# சமயப்பேரறிஞர் திருவிளங்கதேசிகர்

சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளை

எங்கள் ஈழமணித்திருநாடு காலத்துக்குக் காலம் தன்னலமற்ற பெரியோர்களின் சேவையைப் பெற்றுள்ளது. அந்த வகையில் தேச, சமய, கலாசார, சமூகசேவைசெய்த ஒருவர் திருவிளங்கதேசிகராவர்.

சேர் பொன். இராமநாதன், அருணசலம், ஆனந்தகுமாரசுவாமி முதலியோர் தோன்றிய மரபினர் இவர். மானிப்பாய் இந்துக்கல்லூரி முகாமையாளராகச் சுவாமி விபுலாநந்தர் அங்கு அதிபராகக் கடவையாற்றியபோது விளங்கியவர். ஆசிரியராகவும், சட்டத்தரணியாகவும், நீதிபதியாகவும், கொழும்பு மாநகர உறுப்பினராகவும் விளங்கியவர். கொழும்பு தோமசுக்கல்லூரியில் கற்றவர்;

பிற மொழி, கலாசாரத்திலே பெருப்பான்மையோர் மூழ்கிக்கிடந்த காலத்திலே தமிழ்மொழியையும், சைவ சித்தாந்தத்தையும் முறையாகக் கற்றதுமன்றி வாழ்ந்தும் காட்டியவர் திருவிளங்கதேசிகர்.

அறிவு வேறு. அநுபூதி வேறு. அறிஞர் எல்லோரும் அநுபூதிமான்கள் அல்லர். அறிவை அநுபூதியாக்கல்வேண்டும். திருவருளினலேயே அறிவுநிலைக்கு மேம்பட்ட அநுபூதிநிலை ஏற்படும். இவ்வகையில் அநுபூதிமானகப் பலராலும் ஏற்றுக்கொள்ளப் பெற்றவரே தேசிகராவர்.

பவஞானசித்தியார், சிவப்பிரகாசம் ஆகிய சித்தாந்த சாத்திரங்களுக்கு எந்நாளும் எல்லோரும் போற்றத்தக்க அநுபூதி செறிந்த உரையளித்தவர் தேசிகரவர்கள். சிவஞானசாத்திர தோத்திரஅறிவு அநுபூதியாதல்வேண்டும். அந்நிலை பெறுதற்காகத் தமது வாழ்க்கையைத் தூய சைவ நிலையில் வைத்துக்கொண்டார்கள்.

சிவனடியார்களைச் சிவனக மதித்தார்கள். திருவமுது முதலியன அளித்துப் பேணினர்கள். எந்நேரமும் விபூதி துலங்க வாழ்ந்தார்கள். 'கடவுளை வணங்கினுல் முத்தி இன்பம் பெற்று வாழலாம்' என அடிக்கடி கூறிவந்தார்கள். ஞான நெறியில் தாம் வாழ்ந்தமைபோலப் பிறரும் வாழப் பலவாறு தொண்டாற்றினர்கள்.

அறிவுக்கு முதன்மை, அதிகாரத்திற்கு முதன்மை, பட்டம் பதவிகட்கு முதன்மை கொடுத்தால் — அநுபூதிநிலை ஏற்படமாட்டாது என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டிய தேசிகர் சிவயோக சுவாமிகளிடம் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

அவர் காலத்தில் வாழ்ந்து பெரும் புலமைபெற்றிருந்த சுன்னுகம் குமாரசுவாமிப்புலவர் வித்துவான் தாமோதரம் பிள்ளை, பண்டிதர் கந்தையபிள்ளை முதலியோரின் நட்பைப் பெற்றவர்.

முருகப்பெருமான் மீது ஈடுபாடு கொண்டவர். திருப்புகழ் முதலிய தோத்திரத் திருப்பாடல்களுக்குஉரைவிளக்கம் அளித்தவர். இக்காலத்தில் புகழ்பெற்று விளங்குகின்ற பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் முதலியோர் தேசிகரின் சைவசித்தாந்தப் பெரும்பணியைப் பலபடப் போற்றியுள்ளனர்.

புலவர்மணி சோ. இளமுருகனர், தேசிகர் வரலாற்றைத் திரட்டித் தந்துள்ளார். திரு. சி. சிவகுருநாதன் எம்.ஏ.யை தலைவராகக் கொண்ட நூற்பதிப்புக் கழகம் தேசிகரின்

[7ம் பக்கம் பார்க்க]

## கிணற்றுக்கு பலி

(சாவகச்சேரி

அல்லாரை தெற்கைச் சேர்ந்த செல்லப்பா தங்கமுத்து (27 வயது) என்பவர் கிணற்றில் நீர் அள்ளும்பொழுது கால் தடக்கி விழுந்து கிணற்றுக்குப் பலியானர்.

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி என். தர்மேந்திரன் மரணவிசாரணை நடத்தினர். சாவகச்சேரிப் பொலிஸ் கான்ஸ்டபிள் இராசசிங்கம் வயிரமுத்து கந்தையா, கார்த்திகேசு சிவகாமிப்பிள்ளை ஆகியோரை ஆஜர்செய்தார்.

கிணற்றில் துலாவோ, கப்பியோ இல்லையென்றுரம், மரணமானவர் இருதய நோயால் பீடிக்கப்பட்டிருந்தவர்என்றும் சம்பவதினம் கைவாளியால் நீர் அள்ளும்போது கால் தடக்கி விழுந்ததாகவும் விசாரணையில் தெரியவந்தது,

விபத்து மரணமெனத் தீர்ப்பு வழங்கட்பட்டது. (க)

# "சைக்கிள் டியூப் வெடித்தால்கூட இன்று மக்கள் பயந்து ஓடுகின்றனர்!

## இதனை மாற்றி அமைக்கவே அரசுடன் பேச்சுவார்த்தை"

**- அமிர்**

(பண்டத்தரிப்பு)

''தமிழ்மக்கள் தென்னிலங்கையில் தாக்கப்பட்டு உடமைகளை இழந்து ஆதரவற்ற நிலையில் அகதிகளாக இங்கு வந்த போதெல்லாம் கிறிஸ்தவ துறவிகளும், கன்னியாஸ் திரிமார்களும் அவர்களுக்கு ஆதரவளித்து ஆற்றிய பணிகளை நாம் இலகுவில் மறந்துவிடமுடியாது. தமிழர்கள் என்ற இனப்பற்றினலே தான் அவர்கள் இவ்வாறு ஆதரவளித்து தொண்டாற்றினர்கள், இன்று சிலர் திருக்கேதீஸ்வர ஆலயப்பிரச்னையை பெரிதுபடுத்தி தமிழ் மக்சளிடையே மதரீதியிலான பிளவுகளை ஏற்படுத்தமுயற்சிக்கின்றனர். தமிழ்மக்களை அரசியல் ரீதியாக மதரீதியாக சாதிரீதியாக் பிளவுபடுத்த முயற்சிக்கும் எந்த சத்திகளுக்கும் தமிழினம் இடம் கொடுக்காது கவனமாக இருக்கவேண்டும்.''

இவ்வாறு சில்லாலை வடக்கு நல்லாயன் கனசமூக நிலையத்தின் 32 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையில் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயல் அதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். நிலையத்தலைவர் திரு. அ. ம. யோ. புவனேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து கூறியதாவது:

''ஒருசைக்கிள் டியூப் வெடித்தாலே இன்று மக்கள் பயந்து ஓடி புகலிடம்தேடும் பதட்டமானதொரு நிலை ஏற்பட்டுள்ளது. எமது சொந்தமண்ணில் மாற்றார் எம்மைத் தாக்கி, சொத்துக்களை சூறையாடி அழிப்பதை தடுத்து மக்களுக்கு பாதுகாப்பை ஏற்படுத்தி கொடுக்கவே நாம் இன்று அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகின்ருேம். உத்தேச ஊர் காவல்படை எமது மக்களை கிராம மட்டத்தில் பாதுகாக்கும். எதிர்வரும் மேமாதம் தொடக்கம் ஊர்காவற்படை நடைமுறைக்கு வரவுள்ளத.

''எமது இளைஞர்களின் சக்தியை கூறுபோட்டு எமது இனத்தின் ஒற்றுமையை சிதறடிப்பதற்கு சிலசக்திகள்முயற்சி செய்து வருகின்றன. எமது அடிப்படை இலட்சியத்தை கைவிட்டு அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்துகின்ருேம் என்று சிலர் தவருன பிரசாரம் செய்து வருகின்றனர்' இது எமது ஒற்றுமையை க்சிதைக்க மேற்கொள்ளப்படும் பிரச்சாரமாகும். கடந்த 1965ம் ஆண்டில் தமிழ்க்காங்கிரஸ் கட்சி யாழ்ப்பாணத்தில் இந்துப் பல்கலைக்கழகம் வேண்டும் என்றும், தமிழரசுக்கட்சியாகிய நாம் திருகோணமலையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவ வேண்டும் என்றும் இருபிரிவுகளாக பிரிந்து நின்று கோரிக்கை விடுத்தபோது அன்றைய பிரதமர் நீங்கள் இவ்விடயத்தில் ஒற்றுமைப்பட்டு ஒருமுடிவுக்கு வாருங்கள் என்று கூறி அதை அப்போது தட்டிக்கழித்தார். இந்நிலை இனிமேலும் எமக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே ஒற்றுமையை நாடி நிற்கின்ருேம்'' என்ருர்.

### வட்டு. எம். பி. பேச்சு

வட்டுக்கோட்டைத்தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தில் தமக்கு அரசால் ஒதுக்கப்பட்ட 25 லட்சம் ரூபாவிலிருந்து ஆறு வட்சம் ரூபாவை யாழ். மாவட்ட அபிவிருத்திக்கென்று பொதுவாக ஒதுக்கீடு செய்துள்ளனர். இந்த ஆறு லட்சம் ரூபாவில் ஒரு லட்சம் ரூபா பூநகரி மகாதேவாபாலம் அமைக்கும் வேலைக்கும், மிகுதி ஐந்து லட்சம் ரூபா யாழ். பல்கலைக்கழகு மருத்துவபீடக் கட்டிடம் நிறுவுவதற்கும் என்றும் ஒதுக்கப்பட்டுள்ளது. மிகுதியாக இருக்கும் 19 லட்சம் ரூபாவிலிருந்துதான் எமது தொகுதியின் ஏனைய தேவைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யக்கூடியதாக இருக்கின்றது

''எமது தொகுதியில் பல இடங்களில் கைத்தொழில் நிலையங்கள் நிறுவப்பட்டு பலருக்கு தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது. உங்கள் பகுதியில் கிராம அபிவிருத்தி சங்கமூலம் கைத்தொழிற்சாலை யொன்றை நிறுவநடவடிக்கை எடுத்தால் அதற்கேற்ற வசதிகளை நான் பெற்றுத்தருவேன்'' என்ருர்.

இவ்விழாவில் சில்லாலை பங்குத்தந்தை வண. கில்லரி ஜெபநேசன் அடிகளார் சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்க உபதலைவர் டாக்டர் சுகந்தன் இன்ஞசித்தம்பி, திருமதி பேர்லி அத்தஞசியார் யாழ். மாவட்ட அபிவிருத்திச சபை உறுப்பினர் திரு. ச. பூபாலசிங்கம் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினுர்கள் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## குடியேற்றத்திட்ட குறைபாடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1975ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களில் ஒன்ருன கொழும்புத்துறை குடியேற்றத் திட்டத்தில் உள்ள குறைபாடுகள் சம்பந்தமாக யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் கூடிய விசேட கூட்டத்தில் ஆராயப்பட்டது.

மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். பஞ்சலிங்கம் உட்பட அரசாங்க செயலக குடியேற்றத்திட்ட அதிகாரிகளும், குடியேற்றத்திட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இத் திட்டத்தில் உள்ள குறைபாடுகள் பற்றியும், இங்கு செய்யப்பட வேண்டிய அதி முக்கிய அபிவிருத்தி வேலைகள் குறித்தும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

(வ)

## விவசாயிகளுக்குச் சலுகைகள்

### மேலதிக அரசஅதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

''தனியார் கொள்வனவு நிலையங்களின் விலைக்கு ஈடு கொடுக்கத்தக்க முறையில், அரசஇலாகா கொள்வனவு நிலையங்களிலும் விவசாயிகளுக்கு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே யாழ். மாவட்ட விவசாயிகள், நெற் சந்தைப்படுத்தும் சபையின் கொள்வனவு நிலையங்களிலோ கூட்டுறவுச்சங்க கொள்வனவு நிலையங்களிலோ தமது காலபோக நெல்லைக் கொடுப்பதற்குத் தயங்கத் தேவையில்லை''.

இவ்வாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். பஞ்சலிங்கம் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இவ்வருட காலபோக செய்கையில் 92,000 ஏக்கரில் நெல் உற்பத்தி செய்கை பண்ணப்பட்டுள்ளன. இதில் 26,000 ஏக்கர் குளநீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் செய்கைபண்ணப்பட்டுள்ளன. இதனை சாதாரணமான அளவு நெற்செய்கை என்றே குறிப்பிடலாம். இம்முறை சாதாரண விளைவையே எதிர்பார்க்கக்கூடியதாக இருக்கிறது. இதனுல் நிர்ணயவிலையில் விவசாயிகளிடம் கொள்வனவு செய்ய நெற்சந்தைப் படுத்தும் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. விவசாயிகள்தனியார் கொள்வனவு நிலையங்களில் தமது நெல்லை விற்பதற்கு முனைவதால் தனியார் விலைகளுடன் ஒப்பிடத்தக்க வகையில் அந்த விலையுடன் ஈடுகொடுக்கத்தக்க முறையில் விவசாயிகளுக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன'' என்றும் அவர் தெரிவித்தார்.

தரகுக்கூலி, வாகனக்கூலி போன்றவை இல்லாமல் நிர்ணயவிலையில் விவசாயிகளுக்கு கொடுக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஐந்து புசல், அதற்கு மேற்பட்ட புசல் நெல்லைக் கொடுக்கும் விவசாயிகளுக்கு குறித்த வசதிகளும், சலுகைகளும் கொடுக்கப்படுகின்றன. இதனுல் விவகாயிகளுக்கு லாபமும், வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் கூறலாம். தரமான நெல் குறித்த வசதிகளுடன் 150 பவுண் நிறையுள்ளது. 198 ரூபாவுக்கு பெறப்படுகின்றன. தரம் குறைந்த நெல் குறித்த நிறையளவு 193 ரூபா 12சத மாக பெறப்படுகின்றன. கூட்டுறவு சங்கமூலம் இவை 187 ரூபாவாக கொள்வனவு செய்யப்படுகின்றன'' என்றும்அவர் தெரிவித்தார். (வ,

## கடமை தவறும் ஆசிரியர்மீது நடவடிக்கை!

(மாவிட்டபுரம்)

ஆசிரியர்கள் கடமையில் தவறுதல், அடிக்கடிவிடுமுறை எடுத்தல் போன்ற விடயங்களில் அதிபர்கள் மிகுந்த கவனம் எடுத்து அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கல்வித்திணைக்களம் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளது

வடமாநிலத்திலுள்ள பாடசாலைஅதிபர்களுக்குவடமாநில கல்வியதிபதி திரு. க. சிவநாதனுல் இது சம்பந்தமான அறிவித்தல்அனுப்பப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் கடமையில் தவறுவதும், அடிக்கடி விடுமுறைகள் எடுப்பதும் கல்வி நிலையை பெரிதும் பாதிக்கக் கூடியது. ஆகவே இவ்வாருன ஆசிரியர்கள் மீது தீவிரகவனம் செலுத்தி அவர்கள்மீதுதகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அதிபர்கள் அவ்வாறு நடவடிக்கை எடுக்கத்தவறும்பட்சத்தில் அதிபர்கள் மீது கல்வித்திணைக்களம் நடவடிக்கைமேற்கொள்ளும்.

இவ்வாறு மேற்படி அறிவித்தலில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிதி ஒதுக்கியும் வேலை நடக்கவில்லை!

### வட்டு. எம். பி. கவலை

(பண்டத்தரிப்பு)

''மின்சார விநியோகத்திற்காக கடந்த ஆண்டு மேமாதத்தில் பண்டத்தரிப்பு பட்டினசபைக்கென்று என்னுல் ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்படவில்லை. இந்த பணம் சரியான முறையில் செலவழிக்கப் பட்டிருக்குமானுல் உங்கள் சில்லாலைப்பகுதி முழுவதற்கும் இன்று மின்னெளி கிடைத்திருக்கும்.

இல்வாறு வட்டுக்கோட்டை எம். பி. தா. திருநாவுக்கரசு சில்லாலை நல்லியன் சனசமூக நிலைய ஆண்டுவிழாவில் பேசுகையில் தெரிவித்தார்.

## வ. பி. போ. சபை

## பஸ் பயணச் சீட்டுப் பரிசளிப்புவிழா

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச்சபை பஸ் பயணச்சீட்டுப் பரிசளிப்பு விழா, அடுத்த மாதம் ஆரும் திகதி மாலை யாழ். திறந்தவெளி யரங்கில் நடைபெறும்,

கோலாகலமாக நடைபெறவிருக்கும் முதலாவது பஸ் பயணச்சீட்டுப் பரிசளிப்பு விழாவில் யாழ், 'கலாலயா' குழுவினரின் இன்னிசை விருந்தும் இடம்பெறும். இது தவிர 55 மைல் சாதாரண சைக்கிள் ஓட்டப்போட்டி, மாட்டுவண்டில் சவாரிப் போட்டி, வலுவிழந்தோருக்கான இரண்டுமைல் முச்சக்கர வண்டிப்போட்டி ஆகிய போட்டிகளும் நடைபெறவிருக்கின்றன.

இப்போடியில் பங்குபற்ற விரும்புவோர் இம்மாதம் இருபத்தைந்தாம் திகதி அல்லது அதற்கு முன்னர் வடபிராந்திய போக்குவரத்துச்சபை பொதுமக்கள் தொடர்பு அதிகாரி திரு. க. தனபாலசிங்கத்துடன்தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். போட்டிகளில் கலந்துகொள்வோருக்கானமாதிரிப்படிவம் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகியுள்ளது.

## நஞ்சருந்தி சிறுவன் மரணம்

(பண்டத்தரிப்பு)

உரும்பராய் கிழக்கைச் சேர்ந்த எஸ். கிருபைராசா (வயது 9) என்ற சிறுவன் நஞ்சருந்திய நிலையில் யாழ். அரசினர் வைத்தியசாலையில்நேற்று அனுமதிக்கப்பட்டு மரணமானுர். இது தொடர்பான விசாரணைகளை சுன்னுகம் பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

(வெ)

## விஞ்ஞான ஆய்வுகூடம்

(பண்டத்தரிப்பு)

நவாலி மகாவித்தியாலயத்தில் விஞ்ஞானகூடம் ஒன்றை நிறுவுவதற்கு மானிப்பாய் எம். பி. திரு.வி. தர்மலிங்கம் இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

## எல்சல்வடோரில்

## மனித உரிமைகள் புறக்கணிப்பு: அமெரிக்கா உதவியளிக்கக் கூடாதாம்

லண்டன், பெப் 22

''இடதுசாரி துருப்புக்களுடன் எல்சல்வடோர் அரசாங்கம் நடத்தும்போராட்டத்திற்கு அமெரிக்கஉதவி தேவையில்லை''

மேற்கண்டவாறு எல்சல்வடோர் பாதுகாப்பு அமைச்சர் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

எல்சல்வடோருக்கு 8 கோடி டாலர் ராணுவ உதவியை அமெரிக்க ஜனுதிபதி றீகன் வழங்கமுன்வந்துள்ளதாகவும், அதற்கு அமெரிக்க காங்கிரசில் எதிர்ப்புஇருந்துவருவதாகவும் கூறப்பட்டது.

எல்சல்வடோரில் அடிப்படை மனித உரிமைகள் புறக்கணிக்கப்படுவதால். இந்நாட்டிற்கு ஜனுதிபதி றீகன் உதவியளிக்கக்கூடாதென்று அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் அவரை கேட்டுள்ளனர்

வட பிராந்திய போக்குவரத்துச்சபை

## பஸ் பயணச்சீட்டுப் பரிசளிப்பு விழா

1. த பிஞன்ஸ் கொம்பனி லிமிட்டெட் (யாழ்ப்பாணம்)
2. ஆர்த்தி யுவல்லேர்ஸ் (யாழ்ப்பாணம்)
3. கௌரி ரெக்ஸ்ரைஸ்ஸ் (யாழ்ப்பாணம்)
4. செல்வராஜா அன் பிறதர்ஸ்

ஆகியோருடன் இணைந்து
வடபிராந்திய போக்குவரத்துச் சபை
1982-03-06-ந் திகதி பிற்பகல் 5-00 மணிக்கு
யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில்
முதலாவது பஸ் பயணச்சீட்டுப் பரிசளிப்புவிழாவைக்
கோலாகலமாகக் கொண்டாட இருக்கிறது. அத்தோடு
யாழ். "கலாலயா" குழுவினரின்
இன்னிசை விருந்தும்
இடம்பெறவிருக்கிறது.

### முக்கிய நிகழ்ச்சிகள்

1. 55 மைல் சாதாரண (STANDARD) சைக்கிள் ஓட்டப்போட்டி

பாதை

யாழ்ப்பாண மாநகரசபை முன்றலில் ஆரம்பித்து சாவகச்சேரி, கொடிகாமம், முள்ளிமைக்கிருன், மந்திகை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, தொண்டமாஞறு, பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை, தெல்லிப்பளை, சுன்ஞகம், கொக்குவில் ஊடாக யாழ் மாநகரசபை முன்றலில் வந்து முடிவடையும்.

(பிரவேசக் கட்டணம் ரூபா 2/-)

2. மாட்டுவண்டில் சவாரிப்போட்டி

'ஏ' பிரிவு, 'பி' பிரிவு, 'சி' பிரிவு

இப்போட்டி பிற்பகல் 2—00 மணிக்கு யாழ் .வீரசிங்கம் மண்டபத்திற்கருகாமையில் நடைபெறும்.

(பிரவேசக் கட்டணம் ரூபா5/-)

இப்போட்டிக்குப் பொறுப்பாளராக திரு. ஆர். இளையதம்பி கடமையாற்றுவார்.

3. வலுவிழந்தோருக்கான 2 மைல் முச்சக்கர வண்டிப் போட்டி

இப்போட்டி காலை 8—00 மணிக்கு யாழ்.பொலிஸ் நிலையத்திறகருகாமையில் நடைபெறும்.

(பிரவேசக் கட்டணம் எதுவுமில்லை)

இப்போட்டிகளில்பங்குபற்ற விரும்புவோர் கீழ்க்காணும் படிவத்தை நிரப்பி உரிய பிரவேசக் கட்டணத்திற்கான காசுக்கட்டளை அல்லது அஞ்சற்கட்டளையையும் சேர்த்து கீழ்க்காணும் முகவரிக்கு 25-02-82ற்கு முன் அனுப்பிவைக்கவும். காசுக்கட்டளை அல்லது அஞ்சற்கட்டளை பெறுபவர்:

'பிராந்திய கணக்காளர்,
வடபிராந்திய போக்குவரத்துச்சபை'
எனக் குறிப்பிடப்படவேண்டும்,

க. தனபாலசிங்கம்,
பொதுமக்கள் தொடர்பு அதிகாரி,
வடபிராந்திய போக்குவரத்துச் சபை,
165, 4-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின்
பஸ் பயணச் சீட்டுப்
பரிசளிப்பு விழா
மாதிரிப்படிவம்

1. போட்டியாளரின் முழுப்பெயர் ..............................

..............................

2. முகவரி..............................

..............................

மாட்டுவண்டிச் சவாரி / சைக்கிள் ஓட்டப் போட்டி / வலுவிழந்தோருக்கான முச்சக்கர வண்டிப் போட்டியில் பங்குபற்ற நான் விரும்புகிறேன். இதற்கான பிரவேசக்கட்டணம் ரூபா 2/— ரூபா 5/— பெறுமதியான காசுக்கட்டளை / அஞ்சற்கட்டளை இத்துடன் அனுப்பிவைத்துள்ளேன். இந்நிகழ்ச்சியால் எனக்சோ அல்லது எனது உடமைகளுக்கோ ஏற்படும் சேதங்களுக்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபை எந்தவித பொறுப்பாளியும் அல்ல என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன்

போட்டியாளரின் கையொப்பம்

..............................

திகதி..............................

சி. கனகரத்தினம்,
தலைவர் / தகவுடை அதிகாரி,
வடபிராந்திய போக்குவரத்துச் சபை,
165, 4—ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (2312)


வெள்ளை அறிக்கை

# பணம் படைத்தோரை மட்டுமே வளம்படுத்தும்

## கருத்தரங்கில் விளக்கம்

[அரியாலை[

''தமிழ் மக்களின் பாரிய சொத்தாக இருக்கும் கல்விக்கு குழி தோண்டவே இந்தக் கல்வி வெள்ளை அறிக்கை கொண்டு வரப்பட்டுள்ளது. இதுவரை தாய் மொழியைக் கட்டாயமாகக் கற்க வேண்டும் என்ற நியதி இப்பொழுது முதன் மொழி என்ற புதிய பதப் பிரயோகத்திஞல் முற்ருக அழித் தொழிக்கப்படுகிறது''.

இவ்வாறு அரியாலை மேற்கு கலைமகள் சன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற ''வெள்ளை அறிக்கை'' பற்றிய கருத்தரங்கில் சட்டத்தரணி எஸ். தேவராஜன் பேசுகையில் குறிப்பிட்டார்,

திரு. வைகுந்தவாசன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் சட்டத்தரணி தேவராஜன் தொடர்ந்து பேசுகையில் இதுவரை ஐந்தாம் வகுப்பில் நடைபெற்ற போட்டிப்பரீட்சையின் மூலம் புலமைப்பரிசில் பெற்ற பிள்ளைகள் பல்கலைக் கழகம் வரை தொடர்ந்து படிக்க இருந்த வாய்ப்பு வெள்ளையறிக்கையில் நீக்கப்பட்டுள்ளது. கொத்தணிப்பாடசாலை அமைப்பின் மூலம் பெரிய பாடசாலைகள் சிறிய பாடசாலைகளை விழுங்குகின்ற அவல நிலை தோன்றியுள்ளது. கொத்தணிப் பாடசாலைகளில் கல்வி கற்போருக்கென புதிய முறையில் அறிமுகப்படுத்தப்படவிருக்கும் 8ம் வகுப்பு பரீட்சை ஏழை மாணவர்களின் கல்வியை இடைநிறுத்துவதுடன் அவர்களின் பரம்பரைத் தொழிலை மேற்கொள்ள வழி வகுக்கும். வெள்ளை அறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் தனிநிலைப்பாடசாலை அமைப்பு முறை இந்த நாட்டில் ஏழைப்பிள்ளைகள் இதுவரை அனுபவித்துவந்த இலவசக்கல்வியை அடியோடு இல்லாமல் செய்துவிடும். அத்துடன் பணம் படைத்தோருக்கே கல்வி என்ற புதிய சகாப்தத்தை இது ஏற்படுத்தும். புதிய வெள்ளையறிக்கை பணம் படைத்தோரின் பிள்ளைகளை மட்டுமே வளம்படுத்தி பல்கலைக்கழகத்தில் கல்வி பெற வாய்ப்பளிக்கும். ஏழைப்பிள்ளைகளை இடைநடுவில் கல்விக்கே முழுக்குப்போட வழிவகுக்கும், இதனை தமிழ் மக்கள் பூரணமாக எதிர்க்கவேண்டும். மாணவர் சமுதாயம் தமக்கு காலத்துக்காலம் ஏற்பட்ட ஆபத்துக்களை ஒன்றுபட்ட எதிர்ப்பின் மூலமே எதிர்த்து வெற்றி கண்டது. தலைவர்களை மாத்திரம் முழுவதுமாக நாம் நம்பியிருக்காமல் நாடு பரந்துபட்ட அளவில் கல்வி வெள்ளை அறிக்கை அரசாங்கம் வாபஸ் பெறும்வரை எமது எதிர்ப்பைத் தெரிவிக்கவேண்டும் என்று கூறிஞர்.

இந்தக் கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக மாணவன் திரு. கிவராசாசேந்திரனும், இன்னும் பலரும் பேசிஞர்கள்.

# கி. சே. அலுவலர் பதவி முஸ்லிம் இளைஞர்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''தற்போது யாழ். மாவட்டத்தில் காலியாகவுள்ள கிராம சேவை அலுவலர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றுவருகின்றன. தகுதியும் திறமையுமுள்ள முஸ்லிம் வாலிபர்களும் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். இவ்விடயத்தில் கவனமெடுத்து முஸ்லிம் வாலிபர்களையும் இப்பதவிக்கு நியமிப்பதன் மூலம் எமது நீண்டகாலக் குறையை நிவர்த்திசெய்யுங்கள்.''

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை யாழ். முஸ்லிம் படித்து வேலையற்றிருக்கும் இளைஞர் சங்கம் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளது.

இம்மகஜரின் பிரதிகளை ஜனுதிபதி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர், யாழ். மாவட்ட அமைச்சர், மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பியுள்ளனர்.

மகஜரில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

''யாழ். மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்களாகிய நாங்கள் வியாபாரத்தையும், அரசாங்க உத்தியோகத்தையும் நம்பியே வாழ்கிறேம். ஏனெனில் விவசாயம் செய்வதற்குக் காணி நிலம் வசதியின்றியும், கடற்ருெழில் செய்வதற்கு ஏதுவான புறச்சூழல் அற்றவர்களாகவே நாங்கள் நகரில் வசித்துவருகின்றேம். தற்போது அதிகரித்துவரும் வியாபாரப் போட்டியின் மத்தியில் எங்களின் பொருளாதாரம் மிக மோசமாக வீழ்ச்சி அடைந்துவருகிறது. இந்நிலையில் அரசாங்க வேலைவாய்ப்புத்துறையிலும் நாம் புறக்கணிக்கப்பட்டால் அல்லது தவறவிடப்பட்டால் எமது சந்ததிகளின் வாழ்க்கை அஸ்தமனமானதாகும்.

''அண்மைக் காலங்களில் வேலைவங்கியால் வழங்கப்பட்ட தொழில்வாய்ப்புகளில் நாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். யாழ். மாவட்டத்தின் மொத்தச் சனத்தொகை 8,31,112 ஆகும். இதில் சிறுபான்மை முஸ்லிம்களாகிய நாங்கள் 14,169 எண்ணிக்கை உடையவர்கள். விகிதாசார வேலைவாய்ப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட இக்காலகட்டத்தில் யாழ். மாவட்டத்தின் வேலைவாய்ப்புக்களில் 1.5 வீதம் எங்களுக்கு வழங்கப்படவேண்டும் என நாம் எதிர்பார்ப்பது நியாயமானதே.

''இந்நிலைமையில் அண்மையில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட விசேட சேவை அலுவலர் பதவியின்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிவான 91 அலுவலர்களில் ஒரு முஸ்லிம்கூட இடம்பெறவில்லை அத்தோடு யாழ். மாவட்டத்தில் 176 கிராமசேவை அலுவலர் பிரிவுகள் உள்ளன. தற்போது எத்தனை முஸ்லிம்கள் கிராமசேவை அலுவலர்களாக உள்ளனர். கடந்த 20 வருடங்களுக்கு முன்னர் கிராம சேவையாளராக இருந்து காலமாகிவிட்ட ஒரு முஸ்லிம் கிராமசேவை அலுவலரைத் தவிர அதற்குப் பின் ஒருவரும் நியமிக்கப்படவில்லை. விகிதாசார ரீதியில் இரண்டு கிராமசேவை அலுவலர்கள் நியமிக்கப்படவேண்டியது நியாயமானகோரிக்கையாகும். மாவட்டங்களின் நிர்வாகங்களை நிர்வகிப்பதற்காகத் தற்போது அபிவிருத்திச் சபைகள் நியமிக்கப்பட்டுள்ளமையாலும், இதுவரை ஏதோ ஒரு வகையில் முஸ்லிம்களுக்கு வேலைவாய்ப்பில் குறைபாடு ஏற்பட்டதைத் தங்களால் திருத்தி அமைக்கமுடியுமென்ற ஒரு நம்பிக்கையுடனும் மேற்கண்ட விபரங்களைத் தங்களின் மேன்மையான கவனத்திற்குச் சமர்ப்பித்துள்ளோம்.''

''உணவுப் போஷாக்குக் கல்வி

# கிராமிய மக்களின்தேவைகளை பூர்த்திசெய்ய வேண்டும்''

## கல்வி அதிகாரி கூறுகிருர்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வளர்ந்தோர் கல்வித்திட்டத்தின்கீழ்ஒழுங்குபடுத்தப்பட்ட உணவு போஷாக்கு கல்வி தெரிவுசெய்யப்பட்ட 50 தொண்டர் தலைவிகளுக்கு பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர்களால் மூன்று மாதத்திற்கு நடைமுறை படுத்தப்படவிருக்கின்றது.

இது தொடர்பான முதலாவது கருத்தரங்கில் வளர்ந்தோர் கல்வி அதிகாரி திரு. சீ. எஸ். சுப்பிரமணியம் உரையாற்றுகையில் கூறியதாவது:

உணவுப் போஷாக்குக்கல்வி கிராமிய மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய முறையில் அமையவேண்டும். இதற்கு தொண்டர்களாகிய தலைவிகளே ஆய்வு நடத்தி திட்டமிடல் வேண்டும். சமுதாயத்தின் பூரணவளர்ச்சிக்கு மக்களின் ஒற்றுமையும், நாட்டுப் பற்றும், கட்டுப்பாடான வாழ்க்கை முறையும், சிக்கனமும், சமய, கலாச்சார பண்பாட்டு பின்பற்றலும் அவசியமாகும்.

''தலைவர்கள் தேசாபிமானம் மிக்கவர்களாகவும், மக்களின் தேவைகளை அறிந்து, அவர்களுக்கு உகந்த திட்டங்களை வகுத்துச் செயலாற்றக் கூடியவர்களாகவுமிருத்தல் வேண்டும். மாணவர்கள் பொதுக்கட்டிடங்களை அழித்தல், தளபாடங்களை உடைத்தல் பொது சொத்துக்களை நாசமாக்குதல் போன்ற தீய செயல்களிலீடுபடக் கூடாது ஒரு கட்டிடத்தினை நாம் நொடிப்பொழுதில் அழிக்கலாம். ஆனுல் அதைமீளக்கட்டுவதென்ருல் எவ்வளவு சிரமத்திற்குள்ளாக வேண்டும்.

''அனைவரும் பாதிய அறிவை பெற்று கடமையுணர்ச்சியுள்ள சேவை மனப்பான்மையுடன் செயலாற்றுவதற்கு இத்தகைய கருத்தரங்குகள் திட்டமிடுகின்றன'' என்ருர், (வெ)

## நாய்களுக்குத் தடுப்பு ஊசி

(பண்டத்தரிப்பு)

விசர்நாய்க்கடிபரவாது நாய்களுக்கு தடுப்பு ஊசி போடும் திட்டத்தின் கீழ் அராலி பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் 465 நாய்களுக்கு தடுப்பு ஊசி மருந்து போடப்பட்டுள்ளது. அராலி பகுதில் பொது சுகாதாரப்பரிசோதகர் திரு. சி. இராசவரோதயத்தின் தீவிர முயற்சியினல் நூற்றுக்கணக்கான கட்டாக்காலி நாய்கள் கொல்லப்பட்டன.

# மண்டைதீவு வயல்களுக்கு உவர்நீர்பரவும் அபாயம்

## விவசாய முன்னேற்றக்கழக கூட்டத்தில் கவலை

(மண்டைதீவு)

எமது நாட்டிலிருந்துஉணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்த காலமும் ஒன்று இருந்ததை நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது.

தற்போது காடுகளாகக் காணப்படும் இடங்கள் எல்லாம் ஒரு காலத்தில் பொன் விளையும் பூமியாக இருந்தன என்பதற்கு பல சான்றுகள் இருக்கின்றன காலகதியில் நாம்சோம்பேறிகளாக மாறி உழவுத்தொழிலில் கவனம் செலுத்தாது உத்தியோக மோகம் கொண்டதால் எமது நாட்டு விவசாயம் மந்த நிலையில் செல்லவேண்டியிருக்கின்றது.''

இவ்வாறு மண்டைதீவில் நடைபெற்ற விவசாய முன்னேற்றக்கழக மாதாந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் மண்டைதீவு தெற்கு கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. நாகலிங்கம் இராசலிங்கம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் மண்டைதீவு கிராமத்தில் அதிக விளைச்சல் இம்முறை இல்லாவிட்டாலும் கமக்காரர்களை பாதிக்காத அளவில் திருப்திகரமாக இருந்துள்ளது. முன்பு எமது கிராமத்தில் கடல் அணைக்கட்டுகள் பலமாக இருந்ததால் உவர் நீர் வயல்களுக்கு செல்லமுடியாமல் இருந்தது. தற்போது இப் பகுதியில் ஏற்பட்டுவரும் கடல் அரிப்பினால் காலகதியில் இப் பகுதி விவசாய நிலங்களில் கடல்நீர் நிரம்பிவிடுமோ' என்று நாம் அஞ்சவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கடல் அரிப்பை தடுப்பதற்கு பாரிய அணைக்கட்டுகள் கட்டினாலே தவிர வேறு ஒரு வழியாலும் தடுக்கமுடியாது. மண்டைதீவு விவசாயிகள் முன்னேற்றக்கழகம் அரசினருடன் தொடர்புகொண்டு இப்பகுதி விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளை செய்யவேண்டும் என்றார்.

மற்றும் திரு. எஸ். பாலசுப்பிரமணியம் நா. இராமச்சந்திரன் மண்டைதீவு முன்னாள் கிராமத்தலைவர் திரு. மு. நவரட்ணராசா ஆகியோர்உட்பட பலர் பேசினார்கள்.

---

# செய்முறைமூலம் பெண்கள் வருமானம் பெறுவதற்கு வசதி!

## பயிற்சிமுகாமில் விளக்கம்

[சாவகச்சேரி]

''திட்டம் செயற்படுத்தும் மகளிர் பணியகத்தில் நாம் கூடி சுவீடிஷ் சர்வதேச அபிவிருத்தி முகவர் நிலையத்தின் அனுசரணையுடன் இலங்கையின் சில பாகங்களைத்தெரிந்து அபிவிருத்தி செய்துவருகின்றோம். அதில் நான் முக்கியமாகத் தெரிந்தெடுத்தலில் யாழ். மாவட்டமுமொன்றாகும். மாதர்களின் நன்மைக்காக இப்பணியகத்தை அமைத்துத்தந்த ஜனாதிபதிக்கு மாதர்கள் என்றும் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும். என்வாழ் நாளிற் கண்டிராத மகத்தான வரவேற்பை அளித்த உங்களை என்றும் மறக்கமாட்டேன்''

கொடிகாமத்தில் சயிடா வேலைத்திட்டத்தின் கீழ் தென்மராட்சியிலுள்ள மாதர் ஒன்றிணைப்பின் பணிமனைகள் மூலம் ஆரம்பமான மாதர்கள் பயிற்சி முகாமிற்கு வருகை தந்த மகளிர் பணிமனை அத்தியட்சகர் விஜிதா ஜெயசிங்காவிற்கு அளிக்கப்பட்ட பிரமாண்டமான வரவேற்பின் போது உரையரற்றிய மகளிர் பணிமனை அத்தியட்கர் விஜிதா ஜெயசிங்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வைபம் கொடிகாமம் அரசினர் வைத்தியசாலையில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராசா தலைமையில் நடந்தது சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர் வ. ந. நவரத்தினம், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, மகளிர்பணிமனை அத்தியட்சகர் திருமதி விஜித்தா ஜெயசிங்கா சாவகச்சேரி நகரசபைத் தலைவர் சி. க. மயில்வாகனம், திட்டமிடல் அதிகாரி திரு. சு. சிவதாசன் ஆகியோர் மங்கள தீபமேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

(7ம் பக்கம் பார்க்க)

---

# அனாதைஇல்லக் கொடித்தினம்

(யாழ்ப்பாணம்)

கைதடி சைவச் சிறுவன் அனாதை இல்லத்தின் 6வது கொடித்தினம் மார்ச் மாதம் 10ம் திகதி கொண்டாடப்படவிருக்கிறது.

அகில இலங்கை ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 40 திக்கற்ற பிள்ளைகள் இந்த அனாதை இல்லத்தில் ஆதரிக்கப்பட்டு வருகிறார்கள்.

உணவு, உடை, கல்வி வசதிகள் தடங்கலின்றி வழங்கப்பட்டு வருகின்றது.

''நிதிவளம் பெருகினாற்றான் எமது பணிகளும் பெருகும்—விரியும்; எனவே பெருநிதி கொடுத்து பேராதரவு நல்குமாறு'' குறிப்பிட்ட அனாதை இல்ல நிர்வாகப்பணியாளர் திரு. ஆ. கந்தையா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இல்லத்தில் நடைபெறும் கொடித்தினத்தன்று யாழ். அரசாங்அதிபர், பாராளுமன்ற உறுப்பினர்கள், தருமசீலர்கள் கலந்துகொள்வார்கள். (மா)

---

''பரியோவான் கல்லூரி

# மாணவர்களின்படைப்புகளில் சமூகப்பிரச்னைகள் இழையோடியுள்ளன''

(அரியாலை)

''யாழ். பரியோவான் கல்லூரி மாணவர்களின் படைப்புக்களை ஆராயும் பொழுது அவைகளில் சமூகப் பிரச்னைகள் இழையோடியிருப்பதை காணக்கூடியதாகவுள்ளது.''

மேற்கண்டவாறு யாழ். பரியோவான் கல்லூரியின் தமிழ் விழாவில் ஆய்வுரை நிகழ்த்திய திரு. சி. மௌனகுரு கூறினார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

'ஆசிரியர்கள் பேச மாணவர்கள் சபையில் அமர்ந்திருந்து கேட்கும் பாரம்பரிய முறைமை இக்கல்லூரியில் மாற்றமடைந்து, மாணவர்கள் தமது ஆக்கங்களை சபையில் சமர்ப்பித்து பேச, அதனை ஆசிரியர்கள் சபையில் அமர்ந்திருந்து அவதானிக்கும் புதிய நடைமுறை இங்கு உண்டாகியிருப்பது மாணவர்களுக்குப் புதிய உத்வேகத்தை கொடுப்பதாக அமைகிறது.

'சமூகத்தில் இடம்பெறும் கொடுமைகளையும், அட்டூழியங்களையும் எதிர்க்கும், அதற்காக குரல் கொடுக்கும் மனோ பாவங்களை அறியக் கூடியதாக மாணவர்களின் கவிதைகள் அமைந்துள்ளன. இன்று மாணவர்கள் மத்தியில் இப்படியான உணர்வுகள் வளர வேணடும்.

உள்ளடக்கமும், உருவமும் ஒன்றுபடும் பொழுது இலக்கியங்கள் உருவாகின்றன. புதுக் கருத்துக்களைக் கொண்ட புதிய கவிதைகள் புதிய உத்திகளைக் கையாண்டு அமைக்கப்பட வேண்டிய காலத்தில் நாம் இன்று இருக்கிறோம். 'புதிய' புதிய உருவகங்களை கொண்ட கவிதைகள், கட்டுரைகளை மாணவர்கள் தேடிக் கற்க வேண்டும் இதன் மூலமே எடுத்துக்கொண்ட பொருளுக்கேற்ப பேசும், எழுதும் ஆற்றல்கள் மாணவர்கள் மத்தியில் வளர்ச்சியடையும். புதிய உத்திகளைக் கையாண்டு மாணவர்கள் புதிய சிந்தனைகளை நிலைக்களமாகக் கொண்டு கதைகளையும், நாடகங்களையும் கவிதைகளையும் ஆக்க வேண்டும். இவைகள் மூலமே சமூகத்தில் புதிய விழிப்பும், புதிய மாற்றமும் ஏற்பட வழி பிறக்கும். என்றார். (வெ)

---

# கிருமிநாசினி தெளித்தவர் மரணம்

(ஊர்காவற்றுறை)

வேலணை கிழக்கைச் சேர்ந்த கோபால் அருந்தவராஜா (18 வயது) என்னும் இளைஞர் கிருமிநாசினி தெளிக்கையில் மயக்கமுற்று, ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார். மாவட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ். குகதாசன் பிரேத பரிசோதனை நடத்தினார். மரண விசாரணை நடாத்திய மரண விசாரணை அதிகாரி சி. திருநாவுக்கரசு விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார்

---

''செல்வந்த நாடுகளின்

# ஆதிக்கத்திலிருந்து வளரும் நாடுகள் தம்மைப் பாதுகாக்க வேண்டும்''

## இந்திராகாந்தி கூறுகிறார்

புதுடில்லி, பெப். 22

''செல்வந்த நாடுகளின் ஆதிக்கத்திலிருந்து வளரும் நாடுகள் தம்மை பாதுகாத்துக்கொள்ளவேண்டும்''

மேற்கண்டவாறு இந்திய பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி 44 வளரும் நாடு கலந்துகொள்ளும் மகாநாட்டை புதுடில்லியில் ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் ''செல்வந்த நாடுகளின் ஏற்றுமதியினால் மூன்றாம் உலகநாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. உலகப் பொருளாதாரத்தில் இன்று பணவீக்கம் அதிகரித்துள்ளதால் பொருளாதார நிலை மோசமடைந்துள்ளது. இதனை தடுக்கவேண்டும்'' என்றார். (வெ)

---

# சீனா ஆதரிக்கும்

பீக்கிங், பெப். 22

''கம்பூச்சியாவில் வியட்நாமின் ஆதரவுடன் அமைக்கப்பட்டிருக்கும் அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய முன்னணியொன்று அமைக்கப்படுவதை சீனா ஆதரிக்கும்''

மேற்கண்டவாறு சீனப்பிரதம மந்திரி, சீனாவிற்கு விஜயம் செய்துள்ள இளவரசர் சிஹானுக்கின் பிரதிநிதியிடம் தெரிவித்துள்ளார். (வெ)

---

# ''இறைவன் நம்மை ஆண்டு வழிநடத்துகிறார்''

[அரியாலை]

''இறை மகன் அநேகரை அழைத்தார் அழைக்கப்பட்டவர்களில் ஒருசிலரையே தனது சீசராகத் தேர்ந்தெடுத்தார். அவர்களிடம் சுவிசேஷத்தை உலகமெங்கும் பரப்பும் பாரிய பொறுப்பை ஒப்படைத்தார். அதே இறைவன் எம்மை அனுதினமும் ஆண்டு நடத்துபவராக இருக்கிறார்''.

இவ்வாறு யாழ்ப்பாண ஐக்கிய கிறிஸ்தவ சங்கத்தின் ஆதரவில் யாழ்ப்பாணம் கோட்டை ஆலயத்தில் மாணவர்களுக்கென நடாத்தப்பட்ட விசேட ஆராதனையில் குருத்துவ கல்லூரியின் முன்னாள் அதிபர் அருட்திரு; கனன் வி. எஸ். டி. சத்தியநாதன் அடிகளார் அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அடிகளார் தொடர்ந்து பேசுகையில் கடவுளின் சத்தியத்தை ஏற்று நாம் நடக்க வேண்டும். அதன் மூலம் இறைவனின் நாமம்பரிசுத்தப்படும் கடவுள் எல்லாவற்றையும் ஆண்டு நடத்துபவராக நம்மை ஏவி வழிநடத்துபவராகவும் இருக்கிறார். இறை மகிமையினாலும் இறையாட்சியினாலும் நாம் வழி நடத்தப்படுகிறோம் என்றார்.

தேசிய கிறிஸ்தவ இயக்கச் செயலாளர் திரு. லக்ஷ்மன் குணசேகரா பேசுகையில் மாணவர்கள் மத்தியில் இன்று பல பிரச்னைகளிருக்கின்றன. திரும்பத்திரும்ப பரீட்சைகளுக்குப் படிப்பது இந்த நாட்டில் பெரும்பிரச்னையாக இருக்கிறது. பலநாடுகளில் அநேக மாணவர்கள் சிறைச்சாலை கைதிகளாகக் கூட இருக்கிறார்கள். கிறிஸ்தவ மாணவர்களாகிய நாம் நமக்குரிய பிரச்னைகளை இறைவனின் காலடியில் வைத்து அதிலிருந்து விடுபட்டு நமது அயலாருக்கும் பிறருக்கும் நாம் உதவமுன் வரவேண்டும். எமக்காக சிலுவையில் மரித்த யேசுவைப் போல அவருடைய நாமத்தை தரித்திருக்கிற நாமும் பிறருக்காக வாழும் உதவும் நல்ல பழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும்,' என்று குறிப்பிட்டார்.

தென்னிந்திய திருச்சபையின் யாழ் திருமறைவட்ட பேராயர் பேரருட்திரு. டி. யே. அம்பலவாணர் ஆண்டகையின் ஜெபத்துடனும், தேவாசீர்வாழ்த்துடனும் ஆராதனை முடிவடைந்தது.

---

வலிகாமம் மேற்கு

# விசேட சேவை அலுவலர்கள்

(சித்தன்கேணி)

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் விசேடசேவை அலுவலர்களாக நியமனம் பெற்றோர் விபரமும், கிராம சேவகர் பிரிவும்

திரு. இ. ஆ. பஞ்சாயுதன் (சங்கானை கிழக்கு, மேற்கு), திரு. வே. த. கதிர்காமநாதன் (வட்டுக்கோட்டை கிழக்கு மேற்கு), திரு. மு. ந. சந்திரசேகரம்பிள்ளை (அராலி வடமேற்கு தெற்கு கிழக்கு), திரு. எஸ். வைத்தியநாதன் (சுழிபுரம் கிழக்கு மேற்கு), திரு. வி இரத்தினம் (தொல்புரம் மூளாய்).

---

# திருக்கோயில் இந்து ஆலயம் புனரமைக்கப்படும்

(கொழும்பு)

பொத்துவில் தொகுதியில் உள்ள திருக்கோயில் இந்து ஆலயத்தை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளில் புதைபொருளாராய்ச்சித் திணைக்களம் ஈடுபடவுள்ளது.

இதுதொடர்பாக ஆராய்வதற்காக இந்துகலாச்சார, பிரதேச அபிவிருத்தி, தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சர் திரு. செ. இராசதுரை மகாநாடொன்றை நடத்தவிருக்கிறார்.

திருக்கோயில் இந்து ஆலயத்தை புனரமைக்க வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கலாச்சார அமைச்சைக் கேட்டிருந்தது தெரிந்ததே. (வெ)

---

# கண்காணிப்பு நடவடிக்கை

(பண்டததரிப்பு)

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் இரவுநேரக் கடமையின் போது நித்திரை கொள்ளும் ஊழியர்கள் மீது வைத்தியசாலைநிர்வாகம் தீவிர கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றது.

கடந்த வாரம் தமது கடமை நேரத்தில்நித்திரையில் இருந்த சில ஊழியர்கள் மேற்பார்வையாளர்களிடம் அகப்பட்டுக் கொண்டதை அடுத்து மூன்று நாள் சம்பளவெட்டு தண்டனையாக வழங்கப்பட்டதாக அறியப்படுகின்றது.

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் — ஜெய்சித்ரா
கல்யாணமாம் கல்யாணம்

லிடோ
(யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
பூந்தளிர்

ராணி (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ்.நகர்) 10—30, 2—30, 4—45 7—00: 9—30
JIM BROWN, JIM KELLY Three The Hard Way
27—2—82 "HORROR EXPRESS" —Terror Film—

மனோகரா (யாழ்ப்பாணம்)
10—30, 2—30, 6—30, 9—30
ஞானக்குழந்தை

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
நடிகர் திலகம் சிவாஜி-புன்னகை அரசி
கே. ஆர். விஜயா, ஸ்ரைல் நடிகன்
ரஜனிகாந்த்-சுமித்ரா-தேங்காய்
ஜஸ்டிஸ் கோபிநாத்

ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
மலையாளப் பட வரலாற்றில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வசூலிலும் பெரும் சாதனையை ஏற்படுத்தி இலங்கையில் செம்மீன் வெற்றிப் படத்தையடுத்து வெளிவரும் வெள்ளி விழா சித்திரம்.
இந்திய ஜனாதிபதியின் சிறந்த பரிசுக்கான தங்கப் பதக்கத்தைப் பெற்றது.



பிரதாப் சுரேகா
தக்காரா
(கலர்—மலையாளம்)
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

யாழ். றீகல் தினசரி 10—30, 2—30, 6—30, 9—30 நான்குகாட்சிகள்
வெற்றிகரமான 2வது வாரம்
நிறம் மாறாத பூக்கள் புகழ்
விஜயன்
ராஜேஷ்
சுருளிராஜன்,
மாஸ்டர் ரவிக்குமார்,
சத்தியகலா,
சுவர்ணலத
(ஈஸ்ட்மென் கலர்)
டைரக்ஷன்:-
"நீயா" புகழ்
துரை




கூட்டணி - அரசு

# உயர்மட்டப் பேச்சுக்களில் திருக்கேதீஸ்வர விவகாரம்

(பண்டத்தரிப்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணி அரசு உயர்மட்டப் பேச்சுவார்த்தைகள் இம்மாதம் 24ம் திகதியும் நடைபெறும் என்றும், அப்போது திருக்கேதீஸ்வர ஆலய பிரச்னை பற்றியும் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடாத்தி சுமுகமான முடிவு ஒன்றை எடுக்கவிருப்பதாகவும் சில்லாலை நல்லாயன் சன சமூக ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

தமிழினத்துள் மதரீதியிலான பிரிவினைகளை ஏற்படுத்த சிலர் தூபம் இட்டு வருவதாகவும் திரு. அமிர்தலிங்கம் அங்கு கவலை தெரிவித்தார்.

## சிரமதானம்

(மண்டைதீவு)

மண்டைதீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி வித்தியாலய அதிபர் திரு. செ. அ. தேவராசா தலைமையில் சிரமதான வேலைகள் நடைபெற்றது.

இச் சிரமதானத்தில் மண்டைதீவு கிழக்கு கிராம முன்னேற்றச்சங்க உறுப்பினர்கள், றோமன் கத்தோலிக்க வித்தியாலய அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், புனித பேதுறுவானவர் இளைஞர் மன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள். (வெ)

## இராமகிருஷ்ணர் திதி பூசை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் 146வது பிறந்த நாள் திதிபூசை தினமான இம்மாதம் 25ம் திகதி வியாழக்கிழமை பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட விருக்கிறது.

பகல் 11 மணி தொடக்கம் நண்பகல் 12மணிவரை பூஜை ஆரதி, பிரசாதம் நடைபெறும். அன்றுமாலை 6மணிக்கு சுவாமி சிதரூபாளந்தா, பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றி உரை நிகழ்த்துவார்.

இம்மாதம் 28ம் திகதி மாலை மேற்படி சேவாச்சிரமத்தில் 'ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் வாழ்வும் போதனையும் பற்றிய பொதுக்கூட்டம் நடைபெறும்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மாணவிகள் பஜனை செல்விகள் சி. மலர்ராணி, சி. இன்பராணி பக்திப்பாடல்கள்,

பரு. மெதடிஸ்த பெண்கள் உயர்தரபாடசாலை மாணவி செல்வி இந்துமதி தெய்வநாயகம் சொற்பொழிவு.

புற்றளை மகாவித்தியாலயம் ஆசிரியை திருமதி யோகேஸ்வரி மாணிக்கவாசகர் விஷேச விரிவுரை.

பரு. சென்தோமஸ் கன்னிமடம் ஆசிரியை செல்வி சந்திராதேவி விஸ்வநாதன் வீணை இசை.

பரு. சித்திவிநாயகர் ம. வி. ஆசிரியை இன்னிசை விருந்து. (மா)

## வேலை பெற்றுத்தருவதாக மோசடி செய்தாராம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபரொருவர் வெளிநாட்டில் வேலை பெற்றுத்தருவதாகக் கூறி, சுமார் 25 பேரிடம் தலா 17,000 ரூபா வீதம் பெற்று மோசடி செதுள்ளார், இது தொடர்பாக யாழ் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்

செவ்வாய்க்கிழமை
மாசி மாதம் 11ம் திகதி
(23—2—82)

மேடம்: பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும். உதவி செய்யப்போய் உபத்திரவத்தை தேடிக்கொள்வீர்கள், அரசபயத்துக்கும் இடமேற்படுமாகையால் வழக்கு விவகாரங்களில் ஈடுபடாதிருக்கவும்.

இடபம்: வசதிகள் பெருகும், வரவிலும் திருப்தி ஏற்படும், செல்வாக்குப் பெருகும், செல்வாக்குப் படைத்தவர்களின் ஆதரவு கிடைக்கும், ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த விடயமொன்று உங்களுக்கு சாதகமான முடிவு தரும்.

மிதுனம்: புண்ணியகாரியங்களில் அதிக ஈடுபாடு ஏற்படும். பொதுத்துறையில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், இல்லத்திலும் இனிமைக்கும் இடமுண்டு. மகிழ்ச்சிகரமான தினம்.

கடகம்: பகைமூட்டம்தோன்றும் .பதட்டம் உடன்சேரும், மயமான போக்கினாலே மனதும் பாழாய்ப்போகும்.

சிங்கம்: கருத்தொருமித்த காதலர் வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்ச்சி இடம்பெறும், எதிர்புக்கள் மறைந்துளதிலும் சாதகமான சூழ்நிலை உருவாகும், கண்ணியம் சேரும், கௌரவம் உயரும்

கன்னி: எக்கருமத்தையும் எண்ணித்துணிக, அவசரபோக்கினால் அருமையான சந்தர்ப்பத்தை கோட்டைவிடக் கூடும், வணிகர்களாயின் அதிக முதலீட்டை தவிர்த்துக்கொள்ளவும், நிதானம் வேண்டும்.

துலாம்; வணிகர்களுக்கு வியாபார விருத்திக்கு இடமுண்டு, புதிய முயற்சிகள் இன்று கைகூடும், செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும்.

விட்சிகம்: செய்தொழிலில் சிறப்படைவதற்குஇடமுண்டு. புதிய கண்டுபிடிப்புகளும் இடம்பெறும், பொறியியலாளர்களுக்கு சிறப்பான தினம், சிலருக்கு அரசினர் விருதும் கிடைக்கலாம், தொடர்புகளிலும் திருப்தி உண்டு.

தனு: பொருளாதார நிலை சீரடையும். சிலர் வாழக்கையில் எதிர்பாராத வரவுக்கு இடமுணடு. பத்திரிகையாளரின் வேதனம் உயர்த்தப்படலாம். வெளியூரில் இருந்து செய்தியும் கிடைக்கும்.

மகரம்: வாய்வுக் கோளாறினால் உடல்நலம் பாதிக்கப்படலாம், உணவுவிடயத்தில் சுகாதாரம் வேண்டும், தானிய நஷ்டத்துக்கு இடமுண்டு. வியாபாரிகள் புதிய முதலீடுகளைத்தவிர்த்துக்கொள்ளவும்.

கும்பம்: மனக்கோட்டை கட்டிக்கொள்வீர்கள், எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும், அன்புச் சகோதரத்தின் உடல்நலம் பாதிக்கப்படலாம், அபாய காரியங்களை தவிர்த்துக்கொள்ளவும்.

மீனம்: சுற்றுடலில் உங்கள் செல்வாக்கு வளரும், கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள், குடும்பத்தில்பிணக்குகள் பலமடையும், சிலருக்கு அதிர்ஷ்ட லாபமும் கிடைக்கலாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## "மக்கள்சேவையே முக்கியமானது"

(சித்தன்கேணி)

"மக்களுக்கு சேவை செய்வதுதான் அரசாங்க உத்தியோகத்தர்களின் தலையாய கடமையாகும். மக்களின் தேவைகளை நன்கறிந்து உடனுக்குடன் செய்து கொடுத்து மக்களிடைய நன்மதிப்பைப் பெறவேண்டும்" என்று வலிகாமம் மேற்கு உதவிஅரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில்வடிவேல் விசேட சேவை அலுவலர்கள் முன்னிலையில் உரையாற்றுகையில் கூறினார்.

வலிகாகம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடமையேற்ற விசேட சேவை அலுவலர்களை வரவேற்று உரைநிகழ்த்துகையில் உதவி அரசாங்க அதிபர் கூறியதாவது "அரசாங்க சேவையில் முதன்முதலாக ஈடுபடும் நீங்கள் அரசாங்கத்தின் சட்டதிட்டங்களுக்கமைய மக்களுக்கு சேவைசெய்ய வேண்டும்" என்றார்.

## பாரதி நூற்றுண்டு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ்துறை மாதந்தோறும் நடத்தவிருக்கும் பாரதி நூற்றுண்டு கருத்தரங்குத்தொடரில் முதலாவது நிகழ்ச்சி நாளை பிற்பகல் யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் நடைபெறும்,

துணைவேந்தர் சு. வித்தியானந்தன் தொடக்கவுரை நிகழ்த்துவார். "பாரதிகு முன்னும் பின்னும், ஊற்றுக்களும் ஓட்டங்களும்" என்னும் பொருள்பற்றி பேராசிரியர் க. கைலாசபதி ஆய்வுரை நிகழ்த்துவார்.

ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
Macheal Caine-Omasharif
Ashanti
Adults—Action—Color

வெஸ்லி சுன்னிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.15
1—3—82 வரை
ஆதிபராசக்தி

ஸ்ரீதர் தினசரி: 10:30, 2:30, 6:00, 9:30
யாழ். நகர் சிவாஜி - ஜெயலலிதா
பட்டிக்காடா பட்டணமா
(புதிய பிரதி)

# வரி விளம்பரம்


## பயிற்சி

ஒரு மாத எலக்றிக்கல் வயரிங் பயிற்சி 01.03.82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2332

வெல்டிங், வயறிங், செய்முறை அறிமுறை வகுப்புகள் (28.2.82) ஆரம்பம். C. E. T. ஐலன்ட், 58, ஸ்ரான்லி வீதி, (விகாரைக்கு சமீபமாக) யாழ்ப்பாணம். 2344

## தேவை

புதிதாக ஆரம்பிக்கவுள்ள புத்தகசாலைக்கு கணக்காளர், தட்டச்சாளர், விற்பனையாளர்கள் தேவை. சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். 2356

கைத்தறி நெசவாளர்கள் தேவை. (இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்) Furnishing Fabrichஇல் சிறந்த அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. கைத்தறி நெசவு அனுபவமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். சான்றிதழ்களுடன் 9.3.82க்கு முன்னர் விண்ணப்பிக்க. விளம்பர இல: 2342, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 2342

தேநீர் கடைக்கு கொத்து ரொட்டி போடுவதில் அனுபவமுள்ள ஆள் தேவை. நேரில் வரவும். ராஜ விலாஸ், 194, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம், பா. ரவீந்திரமூர்த்தி. 2360

உயிலங்குளம் சந்தியில் சட்டட வசதிகள் உள்ள இடத்தில் அரிசி ஆலை அல்லது பொருத்தமான தொழில் ஆரம்பிப்பதற்கு அனுபவமுள்ள நிர்வாகப் பங்காளி தேவை. T. பரமானந்தன், ஆஸ்பத்திரி வீதி, மன்னார். 2358

## விற்பனைக்கு

யாழ். நகரில் பிரபலமான அச்சகம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 383, K. K. S வீதி, யாழ்ப்பாணம். 2362

டெலிகா வான் (Delica Van) விற்பனைக்குண்டு. ராம் டிஸ்ரிபியூட்டஸ், கே. கே. எஸ். ரோட், இணுவில். 2359


## மோதலில் சமபலம்

(வவனியா)

வவனியாவில் தலைசிறந்த கோஷ்டியான ஜொலிபோய்ஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் யாழ். மாவட்ட சாம்பியன் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்துக்கு மிடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி வவனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றது.

இரண்டுகழகங்களும் தலா இரண்டுகோல்கள் போட்டு வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

மத்தியஸ்தராக திரு. ரவீந்திரன் கடமையாற்றினர்.

ஃ ஃ ஃ

(கோண்டாவில்)

வட்டுக்கோட்டை தொழில் நுட்பகல்லூரிக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கட்போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

கொக்குவில் இந்துக்கல்லூரி முதல் இன்னிங்சில் சகல விக்கட்டுகளையும் இழந்து 55ஓட்டங்களை மட்டும் பெற்றது. இரண்டாவது இன்னிங்சில் 7 விக்கட்டுகள் இழந்து 97ஓட்டங்களைப் பெற்றது.

வட்டுக்கோட்டை தொழில் நுட்பக்கல்லூரி முதல் இனிங்சில் சகல விக்கட்டுகளையும் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது. இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது. இப்போட்டி கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (அ)

இறுதிப் போட்டி

## வெற்றி தோல்வி இல்லை

(யாழ்ப்பாணம்)

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குள் இருக்கும் விளையாட்டுக் கழகங்களுத்கிடையிலான உதைபந்தாட்ட இறுதிப் போட்டி அராலி மாவத்தை விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அராலிமைாவத்தை விளையாட்டுக் கழகத்திற்கும் அராலி சில்வர் ஸ்ரார விளையாட்டுக் கழகத்திற்குமிடையில்விறுவிறுப்பாகநடைபெற்றபோதும் போட்டி சரிசமமாகவே முடிவுற்றது,

பிரதமவிருந்தினராக மக்கள் வங்கி பிரதேச முகாமையாளர் திரு. சரவணபவானந்தன் கலந்து கொண்டார். வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில்வடிவேல், வலிமேற்கு விளையாட்டு உத்தியோகத்தர் திரு. அரிச்சந்திரா, அராலி தெற்கு கிராமசேவகர் திரு, மு. ஒப்பிலாமணி ஆகியோரும் கலந்துகொண்டனர். (கு)

## போட்டி இடைநிறுத்த காரணம்?

(யாழ்ப்பாணம்)

கடந்த 19ம் திகதி ஈழநாடு இதழில் வெளியான மைதானத்தில் அடிதடி போட்டி இடைநிறுத்தம் என்ற தலைப்பில் வெளியான செய்தி தொடர்பாக அராலி கிழக்கு அண்ணா விளையாட்டுக் கழகத் தலைவர், செயலாளர்கள் பின்வருமாறு எழுதுகின்றனர்.

19ம் திகதி இதழில் மைதானத்தில் அடிதடி போட்டி இடைநிறுத்தம் என்னும் தலைப்பின் கீழ் வந்த செய்தியின் உண்மைநிலைமை பின்வருமாறு;

14ம்திகதி அராலி மாவத்தை விளையாட்டு மைதானத்தில் சில்வர் ஸ்ரார் வி. கழகத்திற்கும் அராலி அ. வி. கழகத்திற்கும் நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் விளையாட்டுத் தொடங்கி சில நிமிடங்களில் சில்வர் ஸ்ரார் வி. கழகம் அ. வி. கழகத்திற்கு ஒரு கோலைப் போட்டது. இதன் பின்னர் சில நிமிடங்களில் அ. வி. கழகத்தின் வீரன் ஒரு கோலைப் போடுவதற்கு முயற்சிக்கும் தறுவாயில் தாக்குதலுக்குள்ளாகி மைதானத்தில் மயக்கமான நிலையில் வீழ்ந்தார்.

இந்த விளையாட்டு வீரரின் பரிதாப நிலைகண்ட அ. வி. கழக ஆதரவாளர்கள் எதிர்க் கோஷ்டியின் ஆதரவாளர்களுடன் கைகலப்பில் ஈடுபட்டனர். இந்நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாமல் மத்தியஸ்தர்கள் போட்டியை இடைநிறுத்திவைத்தார்கள்.

## சங்கச் செய்திகள்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு அம்பாள் சனசமூக நிலையத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்டனர்

தலைவர்: சி. சிவானந்தம், உபதலைவர்: கு. கணேஸ்வரன், செயலாளர்: சு. சுந்தரசிவம், உப செயலாளர்: கு. ஜெகதீஸ்வரன் பொருளாளர் அ. சிறீதரன் விளையாட்டுத்தலைவர்: க. மோகனராசா, நிலையப் பொறுப்பாளர்: க. காண்டீபன், கலைப்பொறுப்பாளர்: பாலதிலகராசாசமயப்பொறுப்பாளர்: சிவனேசன், நூலகப் பொறுப்பாளர்: இந்திரராசா, குழுஉறுப்பினர்கள்: ஜெயரட்ணம், பாலசிங்கம், அம்பிகை பாலன்.

ஃ ஃ

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைகரம்பொன் கிழக்கு சிவகுருநாதன் வித்தியாசாலை அபிவிருத்திச்சங்கக் கூட்ட அதிபர் திரு. சு. நடராஜா தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சு, நடராசா, உப தலைவர்: சு. மார்க்கண்டு செய, லாளர்: வி. தியாகராஜா, உப செயலாளர்: கு. பத்மநாதன் தனாதிகாரி: திருமதி வரதா, நான்குபேர்கொண்ட நிர்வாக சபையும் தெரியுசெய்யப்பட்டது.

ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தின் அபிவிருத்திச்சங்க பொதுக்கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு. சோ. சேனாதிராசா தலைமையில் நடைபெற்றது,

நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: சோ. சேனாதிராசா, உபதலைவர்கள்: க. பொன்னம்பலம், நா. நாகலிங்கம் செயலாளர்: இ. வைத்திலிங்கம், உபசெயலாளர்: க. தியாகராசா. பொருளாளர்: து. வசந்தகுமார் நலன்விரும்பி நீ. மு. குமாரசாமி, பழைய மாணவன்: செ. முகுந்தராசன், வித்தியாலய மாணவன்: கா, தவராசசுந்தரம்.

6 பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## செய்முறை மூலம் பெண்கள்.....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தென்மராட்சி மாதர் சங்கத்தலைவர் சிறோன் மணி இராசரத்தினம், கல்வி அதிகாரி சி தியாகராசா டிறிபேக்கல்லூரி அதிபர் க. பாலச்சந்திரன், பளை உதவி அரசாங்க அதிபர் சு. முருகவேள், திரு. நாவுக்கரசு வித்தியாலய முன் நாள் அதிபர் பண்டிதர் பொன் கந்தையினர் மகளிர் பணிமனை உதவி அட்சகர் பத்வேரி மற்றும் பல பாடசாலைஅதிபர்கள், கிராமாதிகாரிகள், முன்னேற்றச்சங்க உத்தியோகத்தர்கள், பெருந்தொகை மாதர்கள், பொது மக்கள், மாணவர்கள் ஆகியோர் திரளாக கலந்துகொண்டனர்.

விஜிதா ஜெயசிங்கா தொடர்ந்து குறிப்பிட்டதாவது: இலங்கையில் சரிபாதியினர் பெண்கள். ஆகவே நாம் வீணே காலம் கழியாது இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காகஎன்னென்ன செய்யமுடியுமோ அதைச் செய்ய வேண்டும் யாழ்ப்பாணத்திலே இது 15வது திட்டமாகும் இந்தத் திட்டங்கள் எல்லாம் வெளிநாட்டு உதவியுடன் செயற்படுத்தப்படுகிறது யாழ்ப்பாணத்தில் நான்கு உதவிஅரசாங்க அதிபர் பிரிவில் இத்திட்டம் நடைமுறை படுத்தப்படுகிறது. இதிற் தென்மாராட்சியும் ஒன்றாகும். ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் 125பெண்கள் வீதம் தெரிவுசெய்யப்பட்டு மொத்தம் 500 பேருக்கு பயிற்சி அளிக்கப்படும் இப்பயிற்சித் திட்டம் பாடசாலையிற் பெறும் பயிற்சிகளிலும் மிகவும் புறம்பானது செய்முறைமூலம் உங்கள் திறமையை வெளிப்படுத்த வேண்டும். நீங்கள் வீட்டிலே இருந்தபடியே 1000 ரூபா வரை சம்பாதிக்கக் கூடியதாக இருக்கும் இத்தொழிலை ஆரம்பிக்கும்போது நீங்கள் செய்யும் பொருட்களைச் சந்தைப்படுத்தலாமோ என்பதையும் சிந்திக்க வேண்டும். பயிற்சிக்காகக் கொடுக்கப்பட்ட பணம் திருப்பிக் கேட்கப்படமாட்டாது. மேலும் குறைந்த வட்டியில் உங்கள் தொழிலை நடாத்த மேலும் பணம் கிடைக்கும் படியாத பெண்களிலும் பார்க்க படித்த பெண்களுக்குக் கூட இத் திட்டம் வழி வகுக்கும் என்றார்.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபரும் யாழ் மாவட்ட அமைச்சரின் செயலாளருமாகிய திரு. தேவநேசன் நேசையா தமது உரையில் குறிப்பிட்டதாவது:

திட்டம செயற்படுத்தும் அமைச்சின் மகளிர் பணியகம் சுவீடிஷ் சர்வதேச அபிவிருத்தி முகவர் நிலையத்தின் அனுசரணையுடன் யாழ் மாவட்டத்திற்கு வழங்கிய 50 லட்சம் ரூபா பெறுமதியான 3 ஆண்டுச் செயல் திட்டத்தின் தொடர்பாகவே இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது.

பெண்களின் அபிவிருத்தியை முழுநோக்கமாகக் கொண்ட இத் திட்டம் உண்மையிற் செழிப்புள்ள ஆரோக்கியமுள்ள குடும்பத்தலைவிகளை உருவாக்குவதன் மூலம் நல்ல குடும்பங்களையும், நாட்டையும் உருவாக்கும் நோக்கமுள்ளதாகும். வறுமை ஒருபுறமிருந்தாலும் இலங்கைப் பெண்கள் பலவகையில் அதிஷ்டம் செய்தவர்கள் தென்னாசிய நிலைமைகளை ஒப்பிடுகையில் இலங்கைப் பெண்கள் வரலாற்றுக் காலந்தொட்டு சுதந்திரம் நிறைந்தவர்களாக இருந்திருக்கிறார்கள்.

பல்கலைக் கழகத்திற்கூட பெண்களின் தொகை அதிகரித்துவருகிறது. பெண்கள் பிரதமராக இருந்தது தொட்டு பிரபல நிர்வாகிகளாகவும், பொறியியலாளராகவும் சட்டத்தரணிகளாகவும் இருந்த வரலாற்றுப் பெருமையும் இலங்கைக்குண்டு.

சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர் தமதுரையில் ஒரு நாட்டின் முன்னேற்றம் அதன் வளர்ச்சி, இன விடுதலை என்பவற்றிற்குப் பொருளாதார அபிவிருத்தி எவ்வளவு முக்கியம் என்பதை நீங்கள் அறிவீர்கள்: நான் கூறவேண்டிய அவசியமில்லை. முன்னேற்றமடைந்த நாடுகளை நாம் நோக்கில் அங்கே பெண்கள் தமது ஓய்வு நேரத்தை ஒரு செக்கன் தானும் துஷ்பிரயோகம் செய்யாது பொருளாதார அபிவிருத்திக்காகப் பாடுபட்டுவருகிறார்கள். இப்பகுதிப் பல மாதர் சங்கங்கள் ஒன்று சேர்ந்து இத் திட்டத்தை நல்ல முறையிற் பயன்படுத்தும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன் என்றார்.

திட்டமிடல் அதிகாரி சு. சிவதாசன் உரையாற்றுகையில் திட்டங்கள் தீட்டினால் மாத்திரம் போதாது அவற்றை நடைமுறைப்படுத்திக் காட்ட எங்கள் பகுதிக்கு மாதர் பணியாக அத்தியட்சகர் திருமதி வினிதா ஜெயசிங்கா வந்துள்ளார். அவர்களுடைய உதவியுடன் நல்ல அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கவேண்டும். திட்டமிட்டு ஒரு குடும்பத்தை அல்லது பள்ளிக்கூடத்தை நடத்தும்போது கிராமம்முன்னேறுகிறது என்றார். திருமதி சிரோன்மணி இராசரத்தினம் நன்றி கூறினார்,

## சமயப்....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அளப்பெரிய உரை நிலைபெறுவதற்காக அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளது. இவ்வாறு பேரறிஞர்களால் போற்றும் வெற்றிபெற்றுள்ள தேசிகரின் திருநாமம் தேசமெங்கும் பரவவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர் நாமம் பரவினால் அவரின் இலட்சியத்திற் சிலவேனும் பரவுமல்லவா?

அறிவுநிலை ஆநுபூதிநிலை இரண்டும் வெவ்வேறாயினும் தேசிகரின் சித்தாந்த நூல்கள் இன்னும் பல்கலைக்கழகப்பாட நெறியில் இடப் பெற்றதாகத் தெரியவில்லை.

சைவ சித்தாந்தத்திற்கெனப் பல்கலைக் கழகத்தில் சிறப்பிடம் ஒன்று ஏற்படுமாயின் அறிஞருலகம் தேசிகரின்செயற்பாடுகளை நன்கு போற்றும் சூழ்நிலை ஏற்படும். அதுவரை அநுபூதிநிலையைப் பின்பற்றி நிஷ்காமிய வாழ்வுவாழும் சிவனடியார்கள் ஆங்காங்கு தேசிகரையும் அவர்அருளிய நூலுரைகளையும் வணங்கி வாழ்த்துவர். அந்தவகையில் தேசிகர் திருநாமம் ஒரு குருநாமமாக சிவஞான வழிபாட்டுக் குழுவினரால் கொள்ளப்பெறுகின்றது.

## துணுக்காய்பிரிவு விளையாட்டு போட்டிகள்

(துணுக்காய்)

துணுக்காய் உவவி அரசாங்க அதிபர் பிரிவின் கிராம சேவையாளர் பிரிவுகளுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் மார்ச் முதல் வாரத்தில் நடைபெறும்.

சைக்கிள் ஓட்டம், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் கரபந்தாட்டம்போட்டிகளும், மெய்வல்லுனர் போட்டிகளும் நடைபெற இருப்பதாக துணுக்காய் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் திரு. சி. துரைசிங்கம் தெரிவித்தார்.


## பகிரங்க ஏலத்தில் காணி விற்பனவு விளம்பரம்

யாழப்பாணம் மாவட்ட கோட்டின் வழக்கு இலக்கம் R 19

புத்தூர் சிவன் கோயிலுக்கு சொந்தமான தென்னை வளர்ப்புக்கு உகந்த காணி—நீர் வசதியுண்டு.

கொடிகாமம் கச்சாய் றோட்டு, கொடிகாமம் புகையிரத நிலையத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் உள்ளது.

காணியின் பெயர் ''கச்சாய் தோட்டமும் மரியன்காடும்.'' விஸ்தீரணம் ஏக்கர் 103 றூட் 02 பேர்ச் 4 2/3.

தென்னை வளர்ப்புக்குரிய அரசாங்க மான்யத்துக்கு உருத்தாகும். முழுக்காணியும் ரூ, 82900/—க்கு குறையாமல் விற்கப்படும்.

விற்பனவு மேற்குறித்த காணிக்குள் 1982ஆம் வருடம் பங்குனி மாதம் 3 ஆம் தேதி முற்பகல் 11—00 மணிக்கு நடைபெறும்.

செ. விசாகரெத்தினம்
ஏலதாரர்

133, பருத்தித்துறை றோட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்,
20—2—82 2361

# இருநூறு கிலோமீட்டர் பாதயாத்திரை நிறைவுபெற்றது!

## எட்டு நாட்களும் கருணாநிதி தலைமை வகித்துச் சென்றார்

சென்னை, பெப். 22

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதி தலைமையில் மதுரையிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட பாதயாத்திரை இன்று திருச்செந்தூர் வந்தடைந்தது.

மதுரையில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இப்பாதயாத்திரை இன்றுமாலை திருச்செந்தூர் வந்தடைந்தபோது பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

மதுரையிலிருந்து திருச்செந்தூர்வரையான இருநூறு கிலோ மீட்டர்தூர பாதயாத்திரைக்கு தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதியே தலைமை வகித்து வந்தார்.

பாதயாத்திரை மேற்கொண்டதால் திரு மு.கருணாநிதியின் பாதங்களில் கொப்பளங்கள் ஏற்பட்டபோதிலும் சிகிச்சை பெற்றுக் கொண்டு இருநூறு கிலோமீட்டர் தூரத்தையும் நடந்து முடித்தார்.

இன்று மாலை திருச்செந்தூரில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

திருச்செந்தூர் ஆலய நிர்வாகி திரு. சுப்பிரமணியம் பிள்ளையின் மரணம் தொடர்பாக நீதி வழங்குமாறு கோரி இப்பாதயாத்திரையை தி. மு. கழகத்தினர் மேற்கொண்டனர்.

### நெல் நிறுவை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விவசாயிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற புகார்களைத் தொடர்ந்து இந்த உயர்மட்ட அறிவித்தல் கிடைத்துள்ளதாக அறியப்படுகிறது.

## 3 வியாபாரிகளுக்கு தண்டனை இருவருக்குப் பிடிவிருந்து

[புலோலி]

பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி முத்திரையிடப்படாத அளவை, நிறுவைக் கருவிகளைப் பாவனை செய்த மூன்று வர்த்தகர்களுக்குக் கோடு கலையும் வரை மறியல் தண்டனைவிதிக்கப்பட்டதுடன் இரண்டு வர்த்தகர்களுக்கு விருந்தும் பிறப்பிக்கப்பட்டது,

நெல்லியடி,பருத்தித்துறைப் பகுதிகளைச் சேர்ந்த ஆறு வர்த்தகர்கள் முத்திரையிடப்படாத அளவை, நிறுவைக்கருவிகளைப் பாவனை செய்தபோது பருத்தித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சரத் தனபால தலைமையிலான பொலிஸ் கோஷ்டியிடம் சிக்கிக்கொண்டதைத் தொடர்ந்து பொலிசார் இவர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்தனர்.

இவ்வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ் மகேசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மூவர் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். நீதவான் இம்மூவருக்கும் கோடு கலையும் வரை மறியல் தண்டனை வழங்கினர்.

எம். பாருக், க. யோகநாதன் ஆகிய இரு வர்த்தகர்களும் மன்றில் ஆஜராகி இருக்காதபடியால் அவர்களுக்கு விருந்து பிறப்பிக்கப்பட்டது. (அ)

## நூலக வாரம் : "பொன்னும் பொருளும் அள்ளி வழங்குவீர்"

### ஆலால் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"நூலக வாரத்தைப் பொறுத்தவரையில், பொது மக்கள் எதிர்காலச் சந்ததிக்கு அறிவுச் செல்வத்தை வழங்கக்கூடிய ஒரு ஒப்பற்ற நூல்நியத்தை நிறுவுவதற்கு பொன்னும்பொருளும் கொடுத்துதவ வேண்டும். பணம் படைத்தோர் பணம் கொடுக்கலாம். பலதலைமுறைகளாகச் சேர்த்துவைக்கப்பட்ட நூல்கள், ஏடுகள் தேடுவாரற்றுக் கிடக்கலாம். அத்தகைய வற்றையும் இந்நூலகத்துக்கு வழங்கி மற்றும் பலரும் பயனடைய வைக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்,"

நூலகவாரத்தை யொட்டி கோப்பாய் எம். பி. திரு, மு. ஆலாலசுந்தரம் விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

### 6 லட்சத்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வட்டார அதிபர்கள் 13பேரும் கலந்து கொண்டனர்.

நகரமுதல்வர் திரு. ஆர். விசுவநாதன் மேலும் பேசுகையில், "யாழ். பொதுசன நூல்நிலைய மீள்விப்பு வேலைகளுக்கு ஒன்றரைக்கோடி ரூபா தேவையென்று பொறியியலாளர்கள் மதிப்பீடு செய்துள்ளனர். ஆனால் ஆறுலட்சத்து எழுபத்தெண்ணாயிரம் ரூபா மட்டுமே கிடைத்திருக்கிறது. இப்பணம் வெளிநாடுகளைப் பொறுத்தவரையில் மேற்கு ஜெர்மனியிலிருந்து 86 ஆயிரம் ரூபாவும் உலக திருச்சபையிடமிருந்து ஒன்றரைலட்சம் ரூபாவும், யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபையிடமிருந்து 3 லட்சம் ரூபாவும் உள்ளடக்கியதாகும்" என்றார்.

நூலகவாரம், கொடித்தினம் இவற்றின் மூலம் மிகுதிப் பணம் கிடைக்குமென்று நம்பிக்கை தெரிவித்த முதல்வர் நூலகநிதி குறித்த இலக்கை அடைந்ததும், ஏப்ரல் மாதம் முதல்வாரத்துக்குள் கட்டிட ஆரம்பவேலைகள் தொடங்கப்படும் என்றும் எரிந்த நூல் நிலையத்தின் புனர்நிர்மாண வேலைகளும் ஆரம்பிக்கப்படும் என்றும் உறுதி அளித்தார்.

'இந்நிலையத்தை கட்டி எழுப்புவதற்கான சகல உதவிகளுக்கும் பத்திரிகைகள் ஒத்தாசைபுரியவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (மா)

### இராணுவத்தினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தினரால்தாக்கப்பட்டவர்களாவர்.

இவர்களிருவரும் படுகாயங்களுக்குள்ளாகி இப்பொழுது சிகிச்சைபெற்று வருகிறார்கள்.

கோப்பாய் எம். பி. தமது புகாரில் இராணுவத்தினரின் தாக்குதல் குறித்து உடனடியாக விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார். (மா)

### கப்பல் சேவை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சேவையை நடாத்த, யாழ். ப.நோ.கூ. சங்கத்தைவிட ஒருவசதியான நிலையில் இருக்கிறது. இதனைக் கருத்திற்கொண்டே ஒப்புதலை அளித்துள்ளோம். மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் என்னைச் சந்தித்தபோது இக்கப்பல் சேவையை நடாத்துவதற்குத் தாங்கள் ஏற்கனவே ஆலோசித்துள்ளதாகவும் தெரிவித்திருந்தார்" என்றார்.(மா)

## 15 பேர் பலி!

தெஹ்ரான், பெப். 23

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் நேற்று நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பதினைந்து பேர் பலியானார்கள். இவர்களில் மூவர் பெண்கள். தெஹ்ரானிலுள்ள சதுக்கமொன்றில்இக் குண்டுவெடித்தது.

குண்டுவெடிப்பினால் பல கட்டிடங்கள், வாகனங்கள் சேதமடைந்தன.

## சுகாதார ஊழியருக்கு நோய் தடுப்புப் பயிற்சி

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகர சுகாதாரப் பணிமனையில் இன்று தொடக்கும் ஒரு வாரத்துக்கு, சுகாதாரப் பகுதி ஊழியர்களுக்கு வைத்திய நிபுணர்கள் பயிற்சியளிக்கவுள்ளனர்.

இப்பயிற்சி நெறியை யாழ். மாநகரமுதல்வர் திரு.இராஜா விசுவநாதன் ஆரம்பித்துவைப்பார்.

குடும்ப சுகாதாரம் பற்றிய பயிற்சியில் சுற்றுடல் சுகாதாரம், போஷாக்குணவு,தொற்று நோய்த்தடுப்பு போன்ற பல விஷயங்களில் பயிற்சியளிப்பர், [மா]

## ஆண்டு விழா கலை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

ஸ்ரார் சனசமூக நிலைய ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழாவும், கலை நிகழ்ச்சிகளும் அடுத்தமாதம் மூன்றும் திகதி நடைபெறும்.

அகில இலங்கை ரீதியிலான ஐம்பது மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியும், பத்து மைல் மரதன் ஓட்டப் போட்டியும் நடைபெறுவதுடன் ஆண்டு விழாவின் கலை நிகழ்ச்சிகளில் முத்தழகி, இதயக் குமுறல், மாப்பிள்ளை தேவை ஆகிய நாடகங்களும் மேடையேற்றப்படும். மரதன் ஓட்டப் போட்டியில் கலந்துகொள்பவர்கள் இம்மாதம் முடிவடைவதற்கு முன்னர் யாழ். கொட்டடியிலுள்ள ஸ்ரார் சனசமூக நிலையத்தின் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

## பொதுசன நூலகத்துக்கு நுண்எழுத்துக்காட்டி அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். பொதுசன நூல்நிலையத்துக்கு மறவன்புலம் திரு. க. சச்சிதானந்தன் ஒரு 'நுண் எழுத்துக்காட்டி'யை அன்பளிப்புச் செய்துள்ளார்.

ஏடனில் தொழில் புரியும் இவர், அங்கிருந்தே இதை அனுப்பியுள்ளார்.

இவரது பெற்றோர் இந்த நுண்காட்டியை யாழ்.மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதனிடம் இன்று மாலை கையளிக்கவிருக்கிறார். (மா)

### மூன்று சோவியத்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கடத்தியுள்ளது.

சிங்கப்பூர் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய தஸ்தாவேஜுகள் மேற்படி சோவியத் பிரஜைகளிடம் இருந்ததாம்.

### துப்பாக்கி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாக்கி எங்கே வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டனராம்.

துப்பாக்கியோ வேறு ஆயுதங்களோ தம்மிடம் இல்லை என்று அவர் கூறியும் அந்த இளைஞர்கள் நிலையத்துக்குள் சென்று துருவி ஆராய்ந்து, இரகசியமாக வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியையும் தோட்டாக்களையும் கொள்ளையடித்துச் சென்றார்களாம்.

இது சம்பந்தமாக நிலையப் பொறுப்பாளர் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார். [மா]


## மரண அறிவித்தல்

- திருமதி தாமோதரம் -

தெய்வானைப்பிள்ளை நாகரத்தினம் தாமோதரம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற டாக்டர் ரி. பி. தாமோதரம் (இளைப்பாறிய சுகாதாரசேவை அத்தியட்சகர், இரத்தினபுரி) அவர்களின் அன்புமனைவியும், கமலா, சரா தாமோதரம் (ஆசிரியர், பரி.யோவான் கல்லூரி), பத்மா, டாக்டர் மீனு (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும், மண்டலேஸ்வரன் (இளைப்பாறிய அதிபர்), அபிராமசுந்தரி, டாக்டர் வி. பி. அமரசிங்கம் (இளைப்பாறிய வைத்திய அத்தியட்சகர், யாழ்ப்பாணம்), டாக்டர் ஸி. ஸி. மகேந்திரா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நல்லூர் குறுக்குத் தெரு, இல. 8, 'விமலம்' இல்லத்தில் இன்று (23—2—82) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4—00 மணியளவில் நடைபெறும்.

2368



## மரண அறிவித்தல்

வி. ஏ. ஜோன்

யாழ்ப்பாணம் மாட்டின் வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய புகையிரதப் பகுதி தலைமைப்பாதுகாப்பு உத்தியோகத்தர் வி. ஏ. ஜோன் அவர்கள் காலமாகிவிட்டார். இவர் யோகம்மாவின் அருமைக் கணவரும், திருமதிகள் அன்னபூரணி மனுவேல்பிள்ளை, அமுதராணி ஜோசப், ஜே. ஏ. ஜோன் (இலங்கை வங்கி, மட்டக்களப்பு), ஜே. ஜே. யோகராஜா (கொக்குவில் பல்தொழில் நுட்பக் கல்லூரி) திருமதி றூபி குணரத்தினம் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவர். அன்னாரின் பூதவுடல் இன்று (23—2—82) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

25, மாட்டின்வீதி, யாழ்ப்பாணம்.

2369


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 803 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் பெப்ரவரி மீ 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.